REGD M. 4642

# திராவிட நாடு

விலை அணா 2 ஆண்டுசந்தா ரூ 7 இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 7 | 26—9—48 | இதழ் 15

## குண்டுவந்து பாய்ந்திட்டாலும்

[ என். எம். முத்து, நடிகன் ]

—⊛—

கட்டாய இந்திதனை எதிர்த்து நின்று
களம் செல்லக் காளைகளே துடித்தெழுவீர்
விட்டாலோ இத்தருணம் இந்தி வந்து
வீழ்த்திவிடும் தமிழரினப் பண்பையெல்லாம்
மட்டில்லா மூவேந்தர் வளர்த்த தமிழ்
மழுங்குவதா? இதைக்கண்டும் வாழ்வதாமா?
தட்டாமல் தலைவர் சொல்லைத் தலைமேற்கொண்டு
தமிழ்காக்க வாரீர் போர்க்கோலங்கொண்டே.

போர் முரசை முழக்கிவிட்டார் தலைவரெல்லாம்
புறப்படுங்கள் இந்தி எதிர்க்களத்தினுக்கே
கூர்மதியைத், தன்மானக்குணத்தை, ஓங்கிக்
கொழுந்துவிடும் இனப்பற்றைக் குறித்துநம்மின்
மார்பகத்தே குண்டுவந்து பாய்ந்திட்டாலும்
மாறாமல் எதிர்த்து நின்று மாள்வதல்லால்
ஏர்பெற்ற தமிழ் வளத்திற்கிடரேசெய்யும்
இந்தி தனக்கொரு சிறிதும் இடங்கொடாதீர்.

# வெட்கப்பட வேண்டும்

சிறைக்கம்பிகளுக்குப் பின்னால் அவர்கள் இருந்தார்கள். சீரியர் காந்தியாரின் திருநாமத்தை ஜபித்தார்கள். ஆங்கிலேயரின் அடக்குமுறைக்கு ஆளானார்கள். சொத்து, சுகம் இழந்து, உற்றார், உறவினரை மறந்து சிலகாலத்திற்காவது இருப்பது எனும் நெஞ்சுரம் கொண்டு, நாட்டு விடுதலைக் கிளர்ச்சியில் ஈடுபட்டார்கள். விடுதலை வாங்கித் தந்த தியாகிகள் பட்டியலிலே அவர்கள் பெயரும் பொறிக்கப்பட்டது.

இந்தத் தியாகிகள் வரிசையிலே எத்தனையோ ரகங்கள் உண்டு. பிரதிபலன் கருதாது, கடமை உணர்ச்சி மேலிட்டு, நாட்டுக்கு ஏற்பட்டிருந்த அபகீர்த்தியைப் போக்க, அடிமை விலங்கை உடைத்தெறியும் அரும்பணியில் ஈடுபட்டு, கட்டளை பிறந்தவண்ணம் கடனாற்றி, கஷ்ட நஷ்டங்கள் ஏற்ற நல்லவர்களை மறப்பதோ, அவர்கள் செய்த தியாகத்தைக் குறைத்து மதிப்பிடுவதோ கூடாது; குறைமதி படைத்தோரே அவ்வாறு கணக்கிட்டு மகிழ்வர். என்றென்றைக்கும் இவர்கள் மக்களின் போற்றுதலுக்கும், புகழ்ச்சிக்கும் பாத்திரமானவர்கள்.

மற்றொரு ரகத்தினர் உண்டு. அவர்களும் சிறை சென்றவர்கள் தான். தியாகம் செய்தவர்கள் என்பதும் உண்மைதான். இருந்தாலும் முன்னையவர்கள் செய்த தியாகத்திற்கும், இவர்கள் செய்ததாகச் சொல்லப்படுவதற்கும் எவ்வளவோ வேற்றுமை உண்டு. சிறைக் கதவு திறந்த பின்னர், விழுகின்ற மாலைகளும், கொடுக்கப்படுகின்ற வரவேற்புகளும், மக்கள் போற்றுதலும் மட்டும், இவர்களுக்குத் திருப்தி அளித்துவிடாது. மக்களின் வாழ்வைச் சுக வாழ்வாக மாற்ற வேண்டுமே, அதற்கான சிறந்த முறைகள் எவை எவை, மற்ற நாடுகளில் மக்கள் இருண்ட வாழ்வைப் போக்க எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் என்னென்ன, அவற்றையெல்லாம் நமது நாட்டில் எவ்வாறு புகுத்தி மக்களுக்கு இருக்கும் அறியாமையை, வறுமையை, அகால மரணத்தை அகற்றுவது என்பதிலே, இந்த ரகத் தியாகிகளுக்குக் கவலை இருப்பது கிடையாது. தாங்கள் சிறையிலிருந்தபொழுது, அதனால் தங்களுக்குப் பொதுமக்களிடம் ஏற்பட்ட செல்வாக்கைப் பணம் பண்ணுவதிலும், சிறப்பை நெருங்கிய சொந்தக்காரர்களுக்கு அரசாங்க அலுவல் தேடித் தருவதிலும், புகழை, முன்னாள் திரிகரண சுத்தியோடு தொண்டாற்றிய கூட்டுத் தோழர்களை நசுக்குவதிலும், எந்தெந்த முறைகளைக் கையாண்டால் நாடிய பொருள் விரைவில் வெற்றிகரமாக முடிவுறும் என்பதே இவர்களுக்கு உள்ள கவலை எல்லாம்.

தகுந்தவர், தகாதவர் என்பதை முதலிலேயே மக்கள் தேர்ந்தெடுத்துக்கொள்ள முடியாதுதான். பெரும்பாலோரிடை எழுத்தறிவு பரவியுள்ள நாடுகளிலேயே இது அவ்வளவு சாத்தியமாகக் கூடியதாக இருக்கவில்லை. இந்த உயர்ந்த பண்பாட்டை இந்தியத் துணைகண்டத்து மக்கள் பெரும்பாலாரிடம் எதிர்[illegible]ப்பதும் வீண்தான்.

இங்கு படித்தோர் தொகை மிக மிகக் குறைவு. அதிலும் அறிவு வளர்க்கும் உலகியல் கல்வி கற்றோர் வெகு சொற்பம். நமக்குவரும் இடர்ப்பாடுகள் எல்லாம், நம்மில் சிலர், தங்கள் சொந்த விருப்பத்தை நிரப்பிக்கொள்வதற்காகக் கையாளப்படும் சில பல செயல்களால் வந்தனவேயன்றி, அறிவிற்கு அப்பாற்பட்டதின் விளைவல்ல எனும் உண்மையை நமது மக்களால் தெரிந்துகொள்வதும் முடியாததுதான்.

ஞாயிறுபோல் ஒளிவீசும் மின்சார விளக்கும், பலநாள் நடந்து சென்றடையவேண்டிய பட்டினத்திற்குச்சில மணிநேரத்தில் சேர்ப்பித்துவிடும் புகைவண்டியும், இன்னும் இது போன்ற பற்பல சாதனங்களும் போதிக்கும் படிப்பினையை நமது மக்கள் இன்னும் புரிந்து கொள்ள முடியவில்லை. அந்த அளவிற்கு நமது மக்கள் அறிவு மங்கிப்போய்க் கிடக்கிறது. சாதாரணமக்கள்மட்டும் இந்த நிலையில் உள்ளனர் என்றால் நாடாளும் மந்திரிகளும் அல்லவோ அத்தகு பண்பினராக உள்ளனர். அமெரிக்காவில் இருந்து விலைகொடுத்து வாங்கின விமானத்திற்கு, நமது மந்திரிகள் கொடுத்த பெயர் ஹனுமான் அல்லவா? மக்கள் நிலைக்கேற்ப மந்திரிகளும் கிடைத்தனர்! நிற்க, **நம்மாலும்ஆகும்** எனும் உயர்ந்த பண்பாடு நமதுமக்களிடம் இன்னமும் ஏற்படவில்லை. மக்களுக்கு வந்துற்றுள்ள இடர்ப்பாடுகள் அனைத்தும் முன்னாள் வினையின் விளைவு என்பதை, இன்று அதனை நேர்செய்யும் முறையில் நாம் நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டால், எதிர்காலத்தில் இன்பபுரியைக்காணலாம் எனும் தந்நம்பிக்கை மக்கள் உள்ளத்தில் இடம்பெற வேண்டும். அதற்கான பணிபுரிவோரே மக்களுக்குத் தேவையான பணிபுரிவோராவர். இதனைவிட்டு, காவியப் பெருமை, கந்தபுராண வரலாறு, கருடபுராணச்சிறப்பு, விபூதி மகாத்மியம் முதலியனபேசி மக்களை மயக்குவது, தங்கள் [illegible]னைவளர்க்க உதவுமேயன்றி, எதிர்கால சந்ததியாருக்கு ஏற்றம் செயததாக ஆகாது.

இந்தியத்துணைக்கண்டத்திலுள்ள ஏழு மாகாணங்களிலும் இன்று தியாகிகளின் ஆட்சிதான் நடைபெறுகிறது. அதிகாரம் புரியும் எல்லா மந்திரிகளும் சிறையிலே சில காலமாவது இருக்கச் செய்யப்பட்டவர்கள்தான். இவர்கள் மேல்நாட்டு மக்கள் கொண்ட நல்லெண்ணத்தின் அறிகுறியாகத்தான், இவர்கள் செய்த தியாகத்தில் மக்கள் கொண்டிருந்த நம்பிக்கையின் காரணமாகத்தான், இவர்களை அதிகாரபீடத்தில் அமர்த்தினர், மக்களில் அதற்கான வாய்ப்பினைப் பெற்றிருப்போர். எத்தனை முறை, எவ்வளவு உரத்து இன்றைய ஆட்சி 'மக்கள் ஆட்சி'தான் என்று எவர் கூறினபோதிலும், மக்கள் ஆட்சி நிலை உணர்ந்தோர் இதனை ஒருகாலும் மக்கள் ஆட்சிமுறை என்று ஒத்துக்கொள்ளார். நூற்றுக்குப் பதின்மூன்று பேர்களுக்குத்தான், தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை இன்று இருக்கிறது. மற்றப் பெருந்தொகையினரான எண்பத்தேழு பேருக்கு வாக்களிக்கும் உரிமை கிடையாது. இந்நிலையில் இதனை,. அதிகாரபீடத்தை அலங்கரித்துக் கொண்டிருக்கும் இவர்களை, மக்கள் ஆட்சிமுறை என்றும்-செல்வாக்கு (Popular) மிக்க மந்திரி சபையினர் என்றும் கூறுவது எப்படிப் பொருந்தும்?

தலைகளை எண்ணிக் கணக்கெடுப்

(14-ம் பக்கம் பார்க்க)

# அவருடைய ஆராய்ச்சி—நமது நன்றி

"வெள்ளானை, பூணிட்ட நான்கு கோடுகளுடன் காண்கிறது. அதன்மீது தாடியுடைய இளைஞர் ஒருவர் இவர்ந்து செல்கிறார். அவர் கைகளில் தாளம் இருக்கிறது. இக்காட்சிக்கு வலப் பக்கம் விரைந்து செல்லும் குதிரை ஒன்று காட்சி அளிக்கிறது. அதன் மீது அழகும் கட்டமைந்த உடலும் கொண்ட ஒருவர் காண்கிறார். யானையும் குதிரையும் நீரில் நடந்து செல்கின்றன. நீரில் அலைகளும் மீன்களும் தெளிவாகக் காண்கின்றன."

இது, சுந்தரரும் அவருடைய நண்பரான சேரமானும் கயிலை சென்ற விதம் எப்படி என்பதை, இற்றைக்கு எண்ணூற்றுப் பதினைந்தாண்டுகட்கு முன் இருந்த ஒரு ஓவியர் தம்முடைய சிற்பத் திறன் கொண்டு விளக்கிய நிகழ்ச்சியாகும். இந்நிகழ்ச்சியும் இதற்குக் கூறப்பட்டுள்ள விளக்கமும் எந்த அளவுக்கு உண்மை என்பது குறித்துள்ள நமது ஆராய்ச்சியைத் தொடங்கு முன்னர், இது குறித்து நமது அன்பர்ஒருவர் எழுதியுள்ளஆராய்ச்சியையும் அது குறித்த விளக்கத்தையுமே முதற்கண் இங்கு குறிப்பிட வேண்டியிருக்கிறது. ஏனென்றால், ஆராய்ச்சி என்றால் என்ன?—எப்படி அது அமையவேண்டும்?—எதற்காக ஒன்றை ஆராய்வது? என்பன போன்ற உண்மைகளை மக்கள்உணர வேண்டுமல்லவா. எனவே, மேற் குறிப்பிட்ட நிகழ்ச்சிக்கு இன்றைய அன்பர் ஒருவர்செய்துள்ள ஆராய்ச்சியை இங்கு குறிப்பிடுகிறோம்.

"சுந்தரரும் சேரமானும் வான் வழியே கயிலைசென்றனர் என்பது சேக்கிழார் கூற்று. இதற்கு மாறாகக் கடல்வழிச் செலவையே தஞ்சைப் பெரிய கோயில் ஓவியம் தெளிவாகத் தெரிவிக்கிறது. பெரிய புராணத்திற்குப் பிறகு இது எழுதப்பட்டிருப்பின் வான் வழியே காட்டப்பெற்றிருக்கும். அங்ஙனம் இன்மையால், இது பெரியபுராணத்திற்கு முற்பட்டதென்பதே பொருத்தமாகும்....... சுந்தரர் வெள்ளை யானை மீதும் சேரமான் பரி மீதும் சென்றதைச் சேக்கிழார் ஒப்புக்கொண்டார்; ஆயின், அவ்விருவரும் கடல்வழிச் சென்றனர் என்ற படக்குறிப்பை அவர் ஒப்புக்கொள்ளவில்லை. என்னை? சேரர் தலைநகரில் இருந்து கடல் வழியே சென்றால் மேற்கே போகக் கூடுமேயன்றி, வடக்கே நிலப்பரப்பிலுள்ள இமயமலையை அடைய முடியாது....................சுந்தரரும் சேரமானும் கயிலை சென்றதாக மூன்று இடங்களில் குறிக்கும் நம்பி, அவர்கள் கடல்வழிச் சென்றனர் என்பதையோ வான் வழிச் சென்றனர் என்பதையோ குறிக்காதுவிட்டமைகவனித்தற்கு உரியது. இவ்விரண்டும் கூறாதது அவரது[Non-Committal policy] நன்குணர்த்துகிறதன்றோ?........"

என்று கூறியுள்ளார். கூறியுள்ளார் என்றால், இங்கே, மேற் குறிப்பிட்ட நிகழ்ச்சியை ஆராய்ந்து தம்முடைய முடிபைத் தெரிவித்துள்ளார் என்று பொருள். என்ன அவருடைய முடிபு?

"அரும்பாடுபட்டு ஆராய்ச்சி செய்து, காவியம் பாடியவர் தமிழில் வேறெவருமே இல்லை"

என்று சேக்கிழாரைப் பற்றி இந்த அன்பர் தம்முடைய முகவுரையில் கூறியிருப்பதை நோக்குவார்க்கு, இவருடைய குறிக்கோள் முழுவதும் சேக்கிழாரைமுன்னிலைப்படுத்தி, அவருக்கே உயர்வும், அவருடைய நூலுக்கே சிறப்பும் கொடுப்பது என்பது தெளிவாகத் தெரியக் கிடக்கிறது. எனவே இவருடைய நோக்கம், குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சியை ஆராய்ந்து அதனால் பெறப்படும் உண்மைகளை விளக்கிமக்கட்குப் பயன்படும் பணி செய்யவேண்டும் என்பதல்ல. ஏன் இங்ஙனம் கூறுகிறோம் என்றால், இவர் தம்முடைய முகவுரையில்,

"இன்று நமது மாகாண அமைச்சருள் ஒருவராகவுள்ள திரு: M.பக்தவத்சலம் அவர்கள் சேக்கிழார் மரபினர் என்பது அறிந்து மகிழ்தற்குரியது."

என்று குறிப்பிட்டிருக்கிறார். இவருடைய கணக்குப்படி, சேக்கிழாரின் காலம் கி.—பி. 1162 என்றாகிறது. அதாவது இற்றைக்கு எழுநூற்று எண்பத்தாறு ஆண்டுகட்கு முன் இருந்தவர் சேக்கிழார் என்பதாகும். எனவே 786 ஆண்டுகட்கு முன்னிருந்த சேக்கிழாரின் மரபோடு இன்றுள்ள தோழர் பக்தவத்சலம் அவர்களைத் தொடர்பு படுத்தி மகிழ்வதற்குரிய நிலையை இந்த அன்பர் ஏன் உண்டாக்கிக் கொண்டார் என்பதை ஊன்றி நோக்கும் போது தான், இவருடைய நோக்கம், சேக்கிழாரைப் புகழ்வதோடு மட்டும் நிற்க முடியவில்லை என்பதும், சேக்கிழார் மரபில் புகழக்கூடியவர்கள் யாராவது இருக்கிறார்களா என்று தேடிக் கண்டுபிடித்து, அவர்களைப் புகழ்வதன் வாயிலாகச் சேக்கிழாருக்கு உயர்வும் மதிப்பும் உண்டாக்குவதே இவருடைய குறிக்கோள் என்பதும் வெளிப்படையாகத் தெரியும் ஒரு மறுக்கமுடியாத உண்மையாகும். இல்லையேல், பெரியபுராணத்தை ஆராயப்புகுந்த இவ்வன்பர், தம்முடைய ஆராய்ச்சிக்கு எந்தவிதமான தொடர்பும் தேவையுமற்ற தோழர் பக்தவத்சலம் அவர்களை எங்கிருந்தோ இழுத்துக்கொண்டு வந்து நிறுத்தி,

"இதோ பாருங்கள் இவரும் சேக்கிழார் மரபினர் தான்"

என்று கூறிச் சேக்கிழாருக்கு உயர்வுதேடமுயன்றிருப்பாரா? இவர் எழுதிய பெரியபுராண ஆராய்ச்சிக்கு அணிந்துரை வழங்கிய அன்பர் திரு. வி. க. அவர்கள்,

"இந்நூலாசிரியர் கருவை உருவாக்க விண்ணும் மண்ணும் அதிரச் சுழன்று சுழன்று உழைத்த உழைப்பு அதிகம்"

என்று கூறியதற்கேற்ப, இவர் சேக்கிழார்க்கு உயர்வுதேட முயன்ற நிலை இருக்கிறதே! அது பெரிது! பெரிது! அம்மம்ம! மிகப் பெரிது!! என்று தான் சொல்ல வேண்டியிருக்கிறது. சேக்கிழாரின் உயர்வுக்கு மேற்கோளாக அவர் மரபிலேயே ஒருவரை எடுத்துக்காட்ட எழுநூற்றெண்பத்தாறு ஆண்டுகள் சென்றன என்பதை எண்ணும் போதே நமக்குக்கூடச் சேக்கிழாரைப்பற்றி ஏதாவது புகழுரை கூறி

வைக்க வேண்டுமென்ற, இரங்கத் தக்க நிலை பிறக்கிறது! ஆனால், புகழ்பாடிப் பிழைக்கும் புன்செயலை ஒரு தமிழன் மேற்கொள்ளக்கூடாது என்ற அறவுரை நம்மைத் தடுத்து விடுகிறது.

இனி, இவ்வன்பர், சுந்தரரும் சேரமானும் கயிலை சென்ற நிகழ்ச்சியைக்கூறி ஆராய்வதை எடுத்துக் கொள்வோம்.

> "சுந்தரர் வெள்ளையானைமீதும் சேரமான் பரிமீதும் சென்றதைச்சேக்கிழார் ஒப்புக்கொண்டார்..........சுந்தரரும் சேரமானும் வான்வழியே கயிலை சென்றனர் என்பது சேக்கிழார் கூற்று."

என்று கூறியுள்ளார். என்றால், ஆராய்ந்து அறுதியிட்டுக் கூறியுள்ளார் என்று பொருள். அதாவது, இவருடைய ஆராய்ச்சி, யானையும் குதிரையும், சுந்தரரையும் சேரமானையும் ஏற்றிக்கொண்டுவான்வழியே பறந்து சென்று கயிலையை அடைந்தன என்பதில் முடிவடைகின்றது. இவருடைய இவ்வாராய்ச்சி முடிவு, அறிவிற்கும் இயற்கைக்கும் பொருந்தி, மக்களின் வாழ்க்கை நலனுக்குப் பயன்படக்கூடியதா என்பதைத்தானே எவரும் அறிய விரும்புவர்—அதுதானே அறிவு வளர்ச்சி பெற்றுவரும் இன்றைய மக்களுக்கு இயற்கையாக உண்டாகக்கூடியதுமாகும். இங்ஙனமன்றித், தஞ்சைப் பெரியகோயிலில் காணப்படும் கயிலை புகுபடலம் தப்பு; சேக்கிழார் கூறும் கயிலை புகுபடலமே சரி என்று கூறுவதால் மக்கள் அடையும் பயனே, பெறும் விளக்கமோ என்ன இருக்க முடியும்? எனவே, மக்கள் இதனால் விளக்கம் பெற்று, இந்நிகழ்ச்சியில் காணப்படும் செய்திகளால் பயன் அடைய முடியுமா என்பனவற்றை இவ்வன்பர் ஆராய்ந்து கூறியிருந்தால், அது, இன்றைய நிலையில் மக்களின் அறிவு விளக்கத்துக்கும்; உண்மைகளை உள்ளபடியே உணரும் முற்போக்குக்கும் உதவியாக இருந்திருக்கும். ஆனால், ஆராய்ச்சிக்கு ஆராய்ச்சி செய்யும் அரும்பணியை நம்போன்றவர்களுக்கு அன்பர் அளித்துவிட்டார். ஒரு ஆராய்ச்சிக்கு, அதுவும் ஆராய்ச்சிதான் என்று சொல்லப்படுவதால், அதனை ஆராயும் நிலையை ஒரு ஆராய்ச்சியாளர் உண்டாக்குவாரானால், அத்தகைய ஒருவரைப் பற்றியும், அவருடைய ஆராய்ச்சி முடிவுகளைப் பற்றியும் அறிஞர் உலகு என்ன கருதும் என்பதை நாம் இங்கு விளக்குவது மிகையாகும். என்றாலும், பெரியபுராண ஆராய்ச்சி என்ற நூலை வெளியிட்ட அன்பரும் ஒரு தமிழ் மகனும் இருப்பதால், அவர், தவறியோ, மறந்தோ, மன்பதையின் நிலை அறியாமலோ, மத மயக்கத்தாலோ செய்யாதுவிட்டதை அந்த இடத்தில் இருந்து தொட்டுச் சென்று அதன் உண்மையை விளக்குவதும் எம்போன்ற தமிழர்களின் கடமையாகும். அதிலும், ஒரு தமிழன் யாதாயினும் ஒரு தவறு செய்துவிட்டால், அந்தத் தவறை எடுத்துக்காட்டி அவன் மீது குற்றஞ்சாட்டுவதோடு மட்டும் நின்று விடுவதும் தமிழர் பண்பாட்டுக்கு மாறானது. எனவே, தவறை எடுத்துக்காட்டி அத்தகைய ஒருவரைத் திருத்துவது இன்னொருவரின் திறமையை விளக்குவது என்பதோடு நின்றுவிடுவதுமில்லை; திறமையும், திறமைஇன்மையும் ஒருவர் பங்கல்ல. எனவே நமது அன்பர் செய்யாதுவிட்ட பணியைத் தொடர்ந்து செய்வது தன்னைப் போன்ற ஒரு தமிழனுக்குக் கைம்மாறு கருதாது செய்யும் பேருதவியுமாகும். ஆகையால் நாம் நம்முடைய அன்பருக்காகச் செய்யும் இவ்வுதவியை அவர் அன்போடு வரவேற்பார் என்றே நம்புகிறோம். காரணம்: அவர் நம்மையும், நாம் அவரையும் நன்கறிந்திருப்பதுதான்.

எனவே, கயிலையில் இருந்த சுந்தரர், அங்கிருந்த அனிந்திதை, கமலினி என்ற இருபெண்கள்மீது காமுற்ற காரணத்தால், சிவனால் இவ்வுலகுக்கு அனுப்பப்பட்டு, இங்கே அவர் தாம் வந்த வேலையைமுடித்துக்கொண்டு, மீண்டும் கயிலையை அடைந்த வரலாறே இக்கட்டுரையின் தொடக்கத்தில் கூறப்பட்டிருப்பதாகும். அதாவது, சுந்தரர், தமது நண்பரான சேரமானுடன் திருவஞ்சைக்களம் என்னும் ஊரில் (மலையாளத்தில்) இருந்த காலத்திலே, ஒருநாள், சிவன் தமது ஏவலாட்களான பிரம விட்டுணுக்களையும், மற்றும் கணங்கள் கணத்தலைவர்களையும் அழைத்து "நீங்கள் இங்குள்ள வெள்ளையானை ஒன்றைக் கொண்டுபோய் நமது தோழனை சுந்தரனை இங்கே அழைத்து வாருங்கள்" என்று கட்டளையிட்டார். உடனே அவர்கள் வெள்ளையானையுடன் புறப்பட்டுப் போய்த் திருவஞ்சைக்களத்தை அடைந்து, சுந்தரரைவெள்ளையானையின் மீது ஏற்றிக்கொண்டு புறப்பட்டார்கள். இதனைக் கேள்விப்பட்ட சேரமான், தனது குதிரை ஒன்றின் செவியில் ஐந்தெழுத்தை (பஞ்சாட்சரத்தை)ச் சொல்லி, அதன் மீதேறி வான்வழிப் பறந்து சுந்தரருக்கு முன்னதாகச் சென்றார். இதனைக் கண்ட சேரமானுடைய மெய்க்காப்புப்படையினர் எல்லாரும் வானை நோக்கிப் பறந்து அவ்விருவருக்கும் முன்னே சென்றார்கள். சுந்தரர், கயிலைக்குப் போகும்போது, "தான் எனை முன் படைத்தான்" எனும் பதிகத்தைப் பாடிக்கொண்டே போய், அதனைக் கடல் மன்னனான வருணனிடத்திலே கொடுத்தார். அவன் அதனைத் திருவஞ்சைக்களத்திலே கொண்டுவந்துகொடுத்து விட்டுப் போனான். சுந்தரர் வெள்ளையானையின்மீது ஏறிக்கொண்டு வானத்தில் பறந்து சென்றதை உபமன்னியு என்ற ஒரு முனிவர் பார்த்து, அவருடைய மகிமையையும், அவரால் பாடப்பெற்ற திருத்தொண்டத் தொகையிலுள்ள அடியார்கள் வரலாறுகளையும் தமது மாணாக்கர்கட்குச் சொன்னார். என்ற இவ்வளவே சுந்தரரைப் பற்றிய வரலாற்றின் சுருக்கமாகும். (இதன் விரிவையும், விளக்கமான ஆராய்ச்சியையும் நமது பெரிய புராண ஆராய்ச்சி என்ற நூலிற் காண்க.) இப்போது இங்கு ஆராய்வது எமது அன்பர் ஒருவர் புதிதாக, அல்ல, புதுமையாக எழுதிய பெரிய புராண ஆராய்ச்சியேயாகும்.

எனவே, இக்கதையிற் பேசப்படும் வெள்ளையானை என்பது, சிவ உலகம் என்று சொல்லப்படும் மேலுலகத்திலுள்ள யானைகளின் நிறத்தைக் குறித்துச் சொல்லப்பட்டது போலும்! சிவ உலகத்திலும் இவ்வுலகத்திலுமாக இருக்கும் ஆரியர் அல்லது சிவபரம்பரையினர் வெள்ளை நிறமாய் இருப்பது போலவே, அந்நாட்டிலுள்ள மற்றை விலங்கு பறவை முதலானவைகளும் வெள்ளை நிறமாய் இருக்கின்றன போலும்! ஏனென்றால், இந்நாவலந்தீவிலுள்ள யானைகள் எதுவும் வெள்ளை நிறமுடையனவாய் இருந்ததாகவோ, இருப்பதாகவோ நாம் கேள்விப்படவில்லை. ஆனால், சில யானைகள், மக்களிற் சில

வெண்குட்ட நோயால் பீடிக்கப்பட்டு உண்மை நிறம்மாறி வெண்ணிறம் அடைவதுபோல், வெண்ணிறம் பெற்றிருக்கலாம்; என்றாலும் அப்படிப்பட்ட வெண்ணிறம் படைத்த யானைகளையும் நாம் பார்க்கவில்லை. ஒருவேளை யானைகள், மக்களைப் போல் குட்டநோய் பிடித்துத்தங்கள் உடம்பை வெண்ணிறமாக்கிக்கொள்ளும் நடத்தையில் ஈடுபடுவதில்லையோ என்னவோ! ஆதலால், யானையின் நிறத்தைப்பற்றி ஈண்டு நீண்ட ஆராய்ச்சி வேண்டுவதில்லை. ஆனால், கயிலையில் இருந்துவந்த யானை பறக்கும் இயல்பைப் பெற்றிருந்ததாகச் சொல்லப்படுகிறது. ஒருவேளை கயிலையில் இருக்கும் யானைகள் நடப்பதோடு பறக்கும் பண்பையும் பெற்றிருக்கலாம்! யார் அறிவார்கள்? நாம் முன்பின் கயிலைக்குப் போய் இருந்தால்தானே இதன் உண்மையைக் கண்டறிய முடியும்! உபமன்னியு முனிவர் என்பவர் கயிலைக்குப் போய்வந்தாரோ இல்லையோ, நமக்குத் தெரியாது; அவர் கூறுகிறார், கயிலையின் அடிவாரத்தில் தாம் இருந்தபோது, வெள்ளையானை ஒன்று சுந்தரரை ஏற்றிக்கொண்டு பறந்து சென்றது என்று. அவர் மட்டுமல்ல, சேக்கிழாரும் அவ்விதம்தான் கூறியுள்ளார். இதோடு இக்கூற்றை மெய்ப்பிக்கும் இரங்கத்தக்க நிலை நிற்கவில்லை. இப்பொழுதுபெரியபுராணத்தைப் 'புதிய முறையில்' ஆராய்ந்த நமது அன்பரும், வெள்ளையானை இருந்தது என்பதனையும், அது பறந்தது என்பதனையும் தங்குதடையின்றி ஒப்புக்கொள்ளும் முறையில் தம்முடைய ஆராய்ச்சிக்கு முடிவு கண்டிருக்கிறார். பறக்கும் தன்மையை இயல்பாகவே பெற்றுள்ள பறவைகள் வானவெளியில் பறப்பதையும், விஞ்ஞான முறையில் பொறிகளின் (இயந்திரம்) துணைகொண்டு வானத்தில் ஊர்திகளைப் (ஏரோப்பிளேன்) பறக்கச் செய்யும் செவ்விய அறிவைப் பெற்ற மக்களும் ஒருங்கே வாழும் இந்நாளில் இருக்கும் வாய்ப்பைப் பெற்ற நமது அன்பர், இவ்விரண்டுமுறைக்கும்உள்ளவேறுபாடு என்ன என்பதை உணரமுடியாத நிலையில், தம்முடைய அறிவின் முதிர்ச்சியால், யானை வானில் பறந்ததென்று எவனோ ஏமாந்தவன் எழுதிவைத்ததை நம்பி, அதனை மெய்ப்பிக்கும் முயற்சியில் தம்முடைய மூளையைச் செலவிட்டாரே என்பதை எண்ணும் போதுதான், ஒரு தமிழ்மகன்—தன்னைப்படித்தவன் என்று சொல்லிக் கொள்ளும் நிலையைப்பெற்ற ஒருவர் நம்மிடையே உலவுகிறாரே என்றெண்ணி வருந்த வேண்டியிருக்கிறது.

நான்கு கால்களையும் அதற்கேற்ப நடந்துசெல்லும் இயல்பையுமேபெற்றுள்ள ஒருயானை வானத்தில்பறந்து சென்றதென்றால், அந்நிகழ்ச்சி, விஞ்ஞானம் அதனிடத்தில்பிச்சை வாங்கக்கூடிய வியப்பிற்குரிய ஒன்றாகும். ஆனால், நம்மக்களிற் கூடச் சிலருக்குப் பித்தம் தலைக்கேறிவிட்டால், நடப்பன பறப்பன போலவும், நிற்பன நடப்பன போலவும், கட்டிடங்கள் ஆடி அசைவன போலவும், நிலத்தில்நிற்பவர்மேல்நோக்கிச்செல்வது போலவுமான நிகழ்ச்சிகள் அந்நோயின் காரணமாக ஏற்படுவதுண்டு. இதுபோலவே, வெள்ளானை வானத்தில் பறந்து சென்றதை முதன் முதலில் கண்டதாகச் சொல்லப்படும் உபமன்னியு முனிவருக்கோ, சேக்கிழாருக்கோ, அல்லது நமது அன்பருக்கோ ஏற்பட்டதென்று சொல்ல முடியுமா? அதிலும் அறிவுவிளக்கம் பெறாத அதாவது உலகியல் அறிவில் தம் நாட்டத்தைச் செலுத்துவது கூடாதென்ற கொள்கை படிந்திருந்த காலத்தில் இருந்தவர்களான உபமன்னியுவுக்கும் சேக்கிழாருக்கும் ஒருவேளை பித்தம் தலைக்கேறிப் பிதற்றும் நிலை ஏற்படாவிட்டாலும், மன்பதைக் கொவ்வாத மத மயக்கத்தினால் இவ்விதம் கூறியிருக்கலாம். ஆனால், மக்கட் பண்பை உணர்ந்து, அதன்படி வாழ்க்கையின் தேவைகளை முறைப்படுத்திக் கொள்ளும் அரிய வாய்ப்பைப் பெற்றுள்ள இந்நாளில், நமது அன்பர் தமது வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்வதற்கு வழி தவறிச் செல்வது அவர் இனத்துக்கே ஒரு அழியாத இழுக்கைத் தேடுவது போலாகும்.

இனிச், சுந்தரருக்காகக் கயிலையில் இருந்துவந்த யானை பறந்து சென்றதென்று சொல்லப்படுவதோடு, சேரனுடைய மலையாள நாட்டுக் குதிரையும் அவரை ஏற்றிக் கொண்டு சுந்தரருக்கு முன்னதாகவே பறந்து சென்றதாகவும் சொல்லப்படுகின்றது. அதுவும், ஐந்தெழுத் தென்று சொல்லப்படும் 'நமசிவய' என்ற சொல்லைக் குதிரையின் செவியில் சொன்னவுடன், பெட்ரோலைத் திறந்துவிட்டு விசையை அழுத்தியவுடன் மோட்டார் வேகமாகச் செல்வதுபோல் அக்குதிரையும் வானை நோக்கிப்பறந்ததாகச்சொல்லப்படுகிறது. இந்நாட்டிலுள்ள யானை, குதிரை, முதலான விலங்குகளும் பறக்கும் என்றால், சுந்தரருக்கு மட்டும் கயிலையில் இருந்து வெள்ளையானை வரவேண்டிய காரணம் என்ன? சுந்தரரும், சேரமானைப்போல் இங்குள்ள யானையோ, குதிரையோ, நாயோ, கழுதையோ ஒன்றின் செவியில் சேரமான் சொன்ன ஐந்தெழுத்தைச் சொன்னால், அது பறவாதா? சேரமானிடம் இருந்த அளவு சிவஅன்பு சுந்தரரிடம் இல்லையா? சேரமானுக்குக் கிடைத்ததுபோல் ஒரு குதிரை சுந்தரருக்குக் கிடைக்கவில்லையா? சுந்தரர் விரும்பி இருந்தால்—கேட்டிருந்தால், சேரமான் ஒன்றல்லப் பல குதிரைகள் அல்லது சேரநாட்டு யானைகளையே கொடுத்திருப்பாரே! சுந்தரர் எதை விரும்பிக்கேட்டாலும் அதை இல்லை என்று சொல்லாது கொடுக்கும் அளவுக்கு அவர்கள் இருவரும் நெருங்கிய நட்புரிமை பூண்ட தோழர்களாக இருந்தனர் என்றும் சொல்லப்பட்டிருக்கிறதே! ஒருகால், சுந்தரர் கயிலையில இருந்து வந்தபோது வெள்ளை யானையில் ஏறிவந்தார்; எனவே திரும்ப அங்கு செல்வதற்கும் வழக்கம்போல் வெள்ளையானை அனுப்பப்பட்டதென்று சொல்வதற்கும் இல்லையே! சுந்தரர் கயிலையில் இருந்துவந்தபோது எப்படி வந்தார்? நடந்து வந்தாரா? சிவ உலகில் இருந்து நிலவுலகிற்குக் குதித்தாரா? என்பனவற்றிற்குப் புராணத்தில் கருவியே இல்லை. கயிலையில இருந்து வந்த சுந்தரர் திருவெண்ணெய் நல்லூரில் இருந்தசடையனாருக்கும்இசைஞானியாருக்கும் பிள்ளையாகப் பிறந்தார் என்று மட்டுமே கூறப்பட்டுள்ளது. கயிலையில் இருந்து சுந்தரரை அனுப்பிய காலத்தில், அவரை எவரும் அறியாமல்—வெளியே சொன்னால் வெட்கம் என்ற முறையில் மறைமுகமாக அனுப்புவதும், பின்னர் கயிலைக்குத் திரும்ப அழைக்கும் போது வெள்ளை யானையையும், பிரம விட்டுணுக்களையும் மற்றும் தேவர்—முனிவர்களையும் அனுப்பி அழைத்துவரச் செய்வதுமான ஏற்பாடு எந்த முறையைச் சேர்ந்தது? சுந்தரர் கயிலையில் இருந்த காலத்தில் என்ன காரியம் செய்தார்? யாரோ இரு பெண்கள் ஒரு மலர்த்

தோட்டத்தில் நிற்கக்கண்டு அவர்கள்மீது காமுற்றார். அந்தக் காம இச்சையை நுகர்ந்தின்புறுவதற்காக அவரும் அப்பெண்கள் இருவரும் இங்கு அனுப்பப்பட்டனர். அந்த வேலை முடிந்ததும் சுந்தரர் கயிலைக்கு அழைக்கப்படுகிறார். அத்தகைய ஒருவருக்குத்தான் இத்தகைய வரவேற்பை எல்லாம் எல்லாவல்ல சிவன் ஏற்பாடு செய்கிறார்! காமுகனுக்குக் கருணை செய்யும் 'நம்' கடவுளின் போற்றியே போற்றி! உலக வழக்கிற்குப் புறம்பான கூடாவொழுக்கத்தை மேற்கொண்ட ஒருவனைத்தான் சேக்கிழார் பெரிய புராணத் தலைவனாக வைத்துப் பாடியிருக்கிறார். இப்படிப்பட்ட காமக் களஞ்சியத்தை நமது அன்பர், தம்முடைய நூலின் 277-வது பக்கத்தில்,

> "ஒவ்வொரு சருக்க முடிவிலும் சுந்தரரைப் பற்றிப் பாடிச் செல்வது, பெரியபுராணம் ஒரு தொடர் நிலைச் செய்யுள் என்பதை வற்புறுத்தற்கே என்பது தெளிவாகும். சுந்தரர் கதை திருமலை (கயிலாய)ச் சருக்கத்தில் தோன்றி வெள்ளானைச் சருக்கத்தில் முடிவதும், பெரியபுராணம் சுந்தரர் பற்றிய காவியமே என்பதை வலியுறுத்துவதாகும்."

என்று கூறுவதன் வாயிலாக நன்கு விளக்கிப் பெரியபுராணம் சுந்தரருக்காகவே பாடப்பட்டதென்பதைத் தெளிவுபடுத்தியிருக்கிறார்.

எனவே, கண்ட கண்ட பெண்களைக் காமுற்றுக் கலவி விளையாட்டில் ஈடுபட்ட ஒருவனுக்கு ஒரு புராணமாம்! அதன்கண் கடவுள் தன்மை மிளிர்கிறதாம்! அதனை மக்கள் படிக்க வேண்டுமாம்! அதனைப் பாடியவர் சேக்கிழாராம்! பல கலைப் புலமை நிரம்பியவராம்! நமது மதிப்பிற்குரிய தோழர் பக்தவத்சலம் அவர்கள் சேக்கிழார் மரபினராம்! தோழர் பக்தவத்சலம் அவர்களுக்கு இந்தப் பெரிய புராணத்தைப் படித்துப் பார்க்கும் அளவுக்கு ஓய்வும், இதில் கூறப்படும் நிகழ்ச்சிகளை ஒப்பு நோக்கிப் பார்த்து உணரும் வாய்ப்பும் விருப்பமும் இருந்து ஒருமுறை படித்துப் பார்ப்பாரானால், இத்தகைய காமக்களஞ்சியத்தைத் தவிர வேறு எதுவும் பாட அறியாத சேக்கிழார் மரபில் தாம் தோன்றியதற்காக உண்மையாகவே வெட்கப்படுவார் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை. இந்தப் பெரியபுராணத்தில் இன்னும் என்னென்ன இடம் பெற்றிருக்கின்றன! ஐயகோ! அவை எல்லாம் நாவினால் உச்சரிக்கவும், உள்ளத்தால் உன்னவும் முடியாத கொலை! கொள்ளை! களவு! சூது முதலான கொடுமைகள் என்னென்ன உண்டோ அவை எல்லாம்தான் இந்தப் புராணத்தைச் சிறப்பிக்கும் நிகழ்ச்சிகளாக அமைந்துள்ளன. இவற்றிற்கெல்லாம் மேலாக இயற்பகை நாயனார் என்ற தலைப்பில் ஒரு நிகழ்ச்சி கூறப்பட்டிருக்கிறதே! அது தமிழ்மக்கள் தங்கள் கனவில் கூட மறந்தும் காணமுடியாத கொடிய நிகழ்ச்சியாகும். ஒரு தமிழ்மகனை எவனாவது ஒருவன் பார்த்து, "உன்னுடைய மனைவியை எனக்குத் தா" என்று கேட்டால், என்ன நடக்கும்??? இப்படிப்பட்ட ஒரு காரியத்தைப் பெரியபுராணத்திற் பேசப்படும் இயற்பகை சிறிதும் தயங்காது தாராளமனதுடன் செய்திருக்கிறார். இவரைப்பற்றி நமது அன்பர் தம்முடைய ஆராய்ச்சியில்,

> சிவனுக்கு மனைவியைத் தரத்துணிந்தவர்.
>
> எதிர்த்த உறவினரைக் கொன்றவர்.
>
> மனைவியை அடியவருடன் அனுப்பியவர்.
>
> உலகியலுக்கு மாறுபட்டவர்.

என்று விளக்கம் கூறியுள்ளார். ஆனால், இந்த இழி செயலை ஒரு தமிழன் செய்திருப்பானா? செய்யத்தான் ஒருப்பட்டிருப்பானா? சேக்கிழார் இந்நிகழ்ச்சியைப் பெரிய புராணத்தில் ஏன் சேர்த்தார்? தன்னை மறந்து கடவுட் பற்றுத் தலைக்கேறிய நிலையிலும் கூட இந்தத் தகாத செயலை எவனாவது செய்ய முற்படுவானா? என்பனவற்றை ஆராய்ந்து, மக்களுக்கு உண்மையை உரைக்க வேண்டுமென்ற நல்லெண்ணம் நமது அன்பருக்கு ஏன் ஏற்படவில்லை என்பது தெரியவில்லை. ஒருவேளை, இவை எல்லாம் ஆராய்ச்சிக்குரியன அல்ல என்று கருதினாரோ அல்லது தம்முடைய ஆராய்ச்சியை இந்தத்துறையில் திருப்பினால், தாம் பெறவிரும்பிய M. O. L. பட்டம் இதனால் மறுக்கப் பட்டுவிடுமோ என்று கருதினாரோ தெரியவில்லை. நாம் இங்கு குறிப்பிட்ட இரண்டு காரணங்களுள் முன்னதல்லப், பின்னதே உண்மையான ஆராய்ச்சியைச் செய்யவிடாமல் தடை செய்துவிட்டதென்பதை அவரே ஒப்புக்கொள்ளும் முறையில் தம்முடைய முகவுரையில் ஒரு குறிப்புத் தந்துள்ளார். அதாவது,

> 'ஆராய்ச்சி நூல் ஆங்கிலத்தில் எழுதப்பெறின் எம். ஓ. எல். ஆராய்ச்சிப் பட்டத்திற்கு அனுப்பலாம் என்னும் எண்ணம் தோன்றியது............... பின்னர் 1945 ஜனவரித் திங்களில் நூலைச் சென்னைப் பல்கலைகழகத்துக்கு அனுப்பினேன்; அதே ஆண்டு ஜூலைத் திங்கள் எம். ஓ எல். பட்டம் கிடைத்தது."

என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை வெளியிடுவதன் வாயிலாக நமது அன்பர் தாம் நூல் எழுதப் புகுந்த தன்னோக்கத்தைத்தெளிவுபடுத்தியுள்ளார். எனவேதான், இப்படிப்பட்ட பட்டப் பிரியரிடம் பகுத்தறிவு விளக்கத்திற்கான ஆராய்ச்சி முறைகளை எதிர்பார்க்க முடியாதென்பதனாலேயே, அவருடைய பணியை—அவர் நம்முடைய நண்பர்—மரபினர் என்று கருதி நாம் செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

இனிச், சுந்தரரும் சேரமானும் கயிலைக்குச் சென்ற பின், அங்கு நடந்த நிகழ்ச்சிகளையும் இங்கு ஆராய்ந்தால்தான் முழு உண்மையும் விளங்கும். வெள்ளானை மீது சென்ற சுந்தரரைக் கயிலையிலுள்ள அனைவரும் வரவேற்று அவரைச் சிவனிருக்கும் இடத்திற்கு அழைத்துச் சென்றனராம். ஆனால், அவருடன் சென்ற சேரமான் என்ற தமிழ் மன்னனுக்குக் கயிலையில் இடம் கிடைக்கவில்லை. சேரமான் கயிலையை அடைந்தவுடன், அங்குள்ள சிவகணங்கள் அவர் பிடரியைப் பிடித்து வெளியே தள்ளிவிட்டன. இது போலவேதான் தமிழ் மகனாகிய திருநாவுக்கரசருக்கும் மோட்சவிடுதி என்று சொல்லப்படும் கயிலையில் இடம் கிடைக்கவில்லை. ஏன் இந்த நிலை ஏற்பட்டது? சுந்தரர் பெற்ற 'பெறற்கரிய' பேற்றைச் சேரனும் அப்பரும் ஏன் பெற முடியவில்லை. சுந்தரர் யார்? சேரனும் நாவுக்கரசரும் யார்? முன்னவர் ஒரு பார்ப்பனர். பின்னவர்

இருவரும் தமிழ் மக்கள். இந்த ஒரு வேறுபாட்டைத் தவிர, அம்மூவருக்கும் இடையே வேறு எந்தவிதமான வேறுபாட்டையும் காணமுடியாது. சிவனிடத்துக் காட்டப்பட்ட அன்பைப் பொறுத்த வரையிலுங்கூடச், சுந்தரரைப் பார்க்கிலும் சேரனும் அப்பருமே மிகுதியான அன்பு காட்டியவர்கள் என்று ஐயமின்றிச் சொல்லலாம். அப்படியிருந்தும் நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநிற்கும் சிவன் என்று நாணமின்றிச் சிலரால் சொல்லப்படும் அந்தப் பெரும் பொருள் காமுகனை சுந்தரரை மட்டும் தம்பால் சேர்த்துக்கொண்டதும், அடியார் பணி செய்து கிடப்பதையே அறமாகக் கொண்டிருந்த சேரமானையும் திருநாவுக்கரசரையும் சேர்த்துக்கொள்ளாததும் ஏன் என்பதைப் பெரிய புராண ஆராய்ச்சியைப் புதிதாக இப்போது எழுதிய நமது அன்பர், தம்முடைய குறிக்கோள் இதனால் கெட்டுவிடும் என்று கருதி எண்ணிப் பார்க்கவில்லையானாலும், அறிவுத்துறைக்குச் சிறிதளவாவது பணியாற்ற வேண்டுமென்று நினைக்கும் மற்றவர்கள் எண்ணிப்பார்க்காமல் இருக்கமுடியுமா?

இனிச், சேரமான் 'ஞானவுலா'ப் பாடியதால், பின்னர் அவருக்கும் கயிலையில் இடம் கிடைத்தது என்று சொல்லப்படும் செய்தி, பட்டாளத்துக்கு ஆள் சேர்ப்பவர்கள், பட்டாளத்தில் சேரக்கூடியவர்கள் நல்ல உடற்கட்டமைந்தவர்களாய் இருக்கிறார்களா என்று பரிசோதனை பண்ணிச் சேர்ப்பதுபோலச், சேரமானும் சிவன்பேரில் பாடக்கூடியவரா என்று பரிசோதனை செய்துபார்த்து, அவர் பாடக்கூடியவர் என்பதை அறிந்தபின் அவரைக் கயிலையில் சேர்த்துக்கொண்டனர் என்றமுறையில் அமைந்துள்ளது. இல்லையேல், சேரமான் 'ஞானவுலா'ப் பாடியதால் கயிலையில் சேர்க்கப்பட்டார் என்று எழுதியிருப்பார்களா?

இனி, நமது அன்பர், சுந்தரருடைய யானையும், சேரமானுடைய குதிரையும் கடல்வழிச் சென்றன என்பதை மறுத்து, அவை வான் வழியே சென்றன என்பதை ஒப்புக்கொள்ளும் முறையில் தம்முடைய ஆராய்ச்சியை முடித்திருக்கிறார். கடல் வழியே யானையும் குதிரையும் சென்றால், அவை குறிப்பிட்ட இடத்துக்குச் செல்ல முடியாதென்பதை விளக்கப் புகுந்த அன்பர்,

> "சேரர் தலைநகரிலிருந்து கடல் வழியே சென்றால் மேற்கே போகக் கூடுமேயன்றி, வடக்கே நிலப் பரப்பிலுள்ள இமயமலையை அடைய முடியாது"

என்று கூறுகிறார். இது முற்றிலும் உண்மையே. வடக்கே போகவேண்டிய ஒருவன் மேற்கே போனால், அவன், தான் போகவேண்டிய இடத்துக்குப் போகமுடியாதென்பது உண்மைதான். ஆனால், தஞ்சைப் பெரிய கோயிலில் சேரனும் சுந்தரரும் கடல்வழிச் சென்றனர் என்று எழுதப்பட்டிருக்கும் ஓவியம் ஓரளவு இயற்கைக்குப் பொருந்தியதென்பதையும், வான்வழிச் சென்றனர் என்று சேக்கிழார் கூறியது சிறிதளவும் இயற்கைக்கும் அறிவுக்கும் பொருந்தாதது என்பதையுமாவது நமது அன்பர் ஆராய்ந்திருக்கலாம். கடல் வழிச் செல்லும் யானையும் குதிரையும் கடலில் நடந்து செல்ல முடியாவிட்டாலும், ஒரு குறிப்பிட்ட தொலைவுக்காவது நீந்திச் செல்ல முடியும். ஆனால் வான் வழிச் செல்லும் யானையும் குதிரையும் சிறிதளவு தொலைவைக் கூடப் பறந்து செல்ல முடியாதே! வேண்டுமானால் ஒரு பத்தடியோ இருபதடியோ பாயலாம்—பறக்க முடியாது. அதிலும் யானையால் அந்த வேலையைக் கூடச் செய்யமுடியாது. இந்த அளவு விளக்கத்தைக் கூட ஆராய்ந்து கூறுவதற்கு அவருக்குக் கிடைக்க வேண்டிய பட்டம் குறுக்கே நின்று தடை செய்யுமானால், அத்தகைய அறிவைப் பறிகொடுத்துப் பெறக்கூடிய பட்டம் எத்தகைய மதிப்பைக் கொடுப்பதாயினும், அதனை ஒரு தமிழன் சுமந்துகொண்டு ஏன் நாட்டில் உலவவேண்டும்? பசி தீர்ப்பதற்கு வழி பட்டம் பெறுவது என்ற ஒன்றுதானா? வேறுவழிகள் இல்லையா?

இனி, நமது அன்பர் தாம் எழுதிய பெரியபுராண ஆராய்ச்சியின் வாயிலாகச் சேக்கிழார் பெரியபுராணம் பாடுவதற்கு எடுத்துக்கொண்ட மேற்கோள்களே தவறற்ற முடிந்த முடிபுகள் என்பதை அவருடைய நூலில் பல இடங்களில் வற்புறுத்தியிருப்பதை நோக்கும்போது, பெரிய புராணம் என்ற ஒருநூல் எழுவதற்குக் காரணமாக இருந்த ஏனையவர்களின் மேற்கோள்களை இவரும் தட்டிக்கழிக்கும் முறையையே (Non—Committal policy) கையாண்டிருக்கிறார் என்று தெரிகிறது. எப்படியென்றால், சேக்கிழார் பெரிய புராணம் பாடுவதற்கு ஆதாரமாக இருந்த நூல்களுள் முதன்மையானது நம்பியாண்டார் நம்பி என்பவரால் பாடப்பெற்ற திருத்தொண்டர் திருவந்தாதியாகும். இந்தத் திருவந்தாதியில், சுந்தரரும் சேரமானும் கயிலை சென்ற நிகழ்ச்சி குறிப்பிடப்பட்டிருக்கிறது, ஆனால், அவர்கள் கடல்வழிச் சென்றனரா? அல்லது வான்வழிச் சென்றனரா? என்பதற்குரிய விளக்கம் அவரால் கூறப்படவில்லை. இதனை நமது அன்பரும் ஒப்புக்கொண்டு,

> "சுந்தரரும் சேரமானும் கயிலை சென்றதாக மூன்று இடங்களில் குறிக்கும் நம்பி, அவர்கள் கடல் வழிச்சென்றனர் என்பதனையோ, விண் வழிச் சென்றனர் என்பதனையோ குறிக்காது விட்டமை கவனித்தற் குரியது. இவ்விரண்டும் கூறாதது அவரது (Non-Committal policy)யைக் குணர்த்துகிறதன்றோ?"

என்று எழுதியிருக்கிறார். எனவே நம்பியாண்டார் நம்பியால் கையாளப்பட்ட தட்டிக்கழிக்கும் முறையை (Non-Committal policy) நமது அன்பரும் கையாண்டது உண்மையானவேவரவேற்கக்கூடியதல்ல. ஏனென்றால், நம்பியாண்டார் பாடியது பெரிய புராண வரலாற்றுச் சுருக்கம். ஆனால் நமது அன்பர் எழுதிய நூல் ஒரு ஆராய்ச்சி என்று சொல்லப்படுகிறது. ஆராய்ச்சியில் தட்டிக்கழிக்கும் முறைகையாளப்படவேகூடாது. உள்ளதை உள்ளபடி—தமது கருத்தில் தோன்றும் உண்மைகளை வெட்டவெளிச்சமாக விளக்கி எழுதுவதே ஆராய்ச்சியாகும். இங்கு தட்டிக் கழிக்கும் முறை சிறிதும் நெருங்கக்கூடாது.

வடக்கே செல்லவேண்டிய ஒருவன் மேற்கே போனால், அவன், தான் போகவேண்டிய வடக்குப் பக்கத்திற்குப் போகமுடியாது என்ற அளவுக்கு ஆராய்ச்சியை—ஆராய்ச்சி செய்யவேண்டிய முறைப்படி சென்று தம்முடைய கருத்தை வெளியிட்ட நமது அன்பர், யானையும், குதிரையும் வான்வழி பறந்துசென்

(10-ம் பக்கம் பார்க்க)

# திராவிட நாடு

காஞ்சி] 26—9—48 [ஞாயிறு


# "நம்ம சர்க்கார்"

கேட்டையோடா—தம்பி
கேட்டையோடா
கெக்கலிக்குஞ்சேதியொண்ணு
கேட்டையோடா!

சொந்தத்திலே சர்க்காரு
வந்திருக்குதாம்—
எல்லாம் சோகமாக வாழ வழி
போறந்திருக்குதாம்
மந்திரிங்க சர்க்காரு
வந்திருக்குதாம்— நாம்ப
மானிலத்தை ஆளுங் காலம்
வந்திருக்குதாம்

மானமேல்லாம் கண்தேறந்து
மாரிபோழியும் இந்த
மண்டலத்து ஏரியேல்லாம்
ஊறிவழியும்
பானையெல்லாம் நெல்லுமணி
போங்கிவழியும் இந்தப்
பாட்டாளி மனசுலேயும்
பாரமோழியும்

வயித்துநேறைய நல்ல சோறு
கேடைக்கும் நம்ப
மானத்தைக் காக்க ஒரு
கந்தே கேடைக்கும்
பயித்தியம் பிடிச்சவங்க
போலகேடக்கும்-இந்தப்
பஞ்சைகள் மனசுக்கொரு
தஞ்சங்கேடைக்கும்

நாட்டுக்கு நல்லாட்சி ஏற்பட்டு விட்டது, இனி வீட்டிலே வேதனை இல்லை, வாழ்க்கையிலே வறட்சி இல்லை, அடிமை என்ற இழி பட்டம் இல்லை என்பதுமட்டுமல்ல, தேய்ந்த வாழ்வு இனி இல்லை, என்ற 'சேதி' கூறி, தேசியக் கவிகள் தீட்டிய பல பாடல்களிலே ஒன்று, மேலே நாம் எடுத்துப் பொறித்திருப்பது—நமது கற்பனையல்ல.

கேக்கலிக்கும் சேதி! கிராமிய நடையிலே கூறுகிறார் அந்தக்கவி—களிப்பூட்டும் செய்திதம்பி! என்று அறிவிக்கிறார்.

ஆளவந்தார்களாக, அவருடைய அன்புக்குப் பாத்திரமான காங்கிரஸ் கட்சி அமர்ந்ததும், அகமகிழ்ச்சி அவருக்கு—அந்த மகிழ்ச்சியிலே, கவிதைப் பெருக்கெடுக்கிறது—நாடாள நம்மவர்கள் வந்துவிட்டார்கள் எனவே இனிநல்வாழ்வு கிடைக்கும் என்று நம்பினார்கள். இன்பம் தரும்எண்ணற்றஎண்ணங்கள் அவர்களின் இதயவெளியிலே நர்த்தனமாடின! பச்சைப் பட்டாடை உடுத்திக் கொண்டு நிலமகள், பலவகை மணம் பரப்பிக்கொண்டு மலைமகள், மக்களின் வாழ்வை வளமாக்கும் திருத்தொண்டிலே ஈடுபடக் காண்கிறார்! வீடுகளிலே, ஒளி—மக்கள் அகத்திலே மகிழ்ச்சி இருப்பதால் முகம், திருவிளக்காகிறது!கட்டுக்கு அடங்க மறுத்த ஆறுகளிலே எல்லாம், புதிய தேக்கங்கள்! காம்பாகிக் கிடந்த இடமெல்லாம், செழுமை. காடுமேடுகளெல்லாம் கழனிகளாகி விட்டன! உழவர் ஆனந்தப்பள்ளுப் பாடுகின்றனர். ஆலைகள் பொருள்களைச்செய்து குவிக்கின்றன! சாலையிலே நடந்து செல்கையில் ஆலைத் தொழிலாளி பாடுகிறான், "நாமிருக்கும் நாடு நமதே என்பதறிந்தோம்" என்று. கல்விக்கழகங்கள், ஊர்தோறும் காட்சியளிக்கின்றன—காட்டு ராஜாக்களின் கொட்டம் அடங்கி, கலப்பை தூக்கிகள் என்றகேவலநிலையிலிருந்த பாட்டாளிகளின் உண்மை மேன்மை விளங்கி நாட்டுக்குப் புது வாழ்வு, பிறக்கிறது!!

கவியின் கற்பனையிலே தோன்றிய காட்சிகள்!! அவர் உள்ளத்திலே, இன்பத்தைக் கிளறும் காட்சிகள்.... யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற முறையிலே, அவர், நாட்டு மக்களுக்கெல்லாம் தெரிவிக்கிறார், கெக்கலிக்கும் சேதியைக் கேளடா தம்பி என்று.

அவர் பணி அத்துடன் முடிந்தது—மக்களின் பிணியோ, இந்த மதுரகீதத்தை மருந்தாகக் கொண்டு மறைய மறுத்தது. மக்கள், ஆளவந்தார்களின் நிறமும் உருவும் மாறியிருப்பதை மட்டுமே காணமுடிந்தது—காணமுடிகிறது—வாழ்க்கையோ எப்போதும் போல இருண்டேகிடக்கிறது. ஏக்கம் மேலிடுகிறது—கோபம் கூடத்தான் பிறக்கிறது—ஆனால், வாய்திறந்தாலோ, வந்தேமாதரம்! இது நம்ம சர்க்கார்!! என்ற கட்டளை பிறக்கிறது.

நம்ம சர்க்கார்! இந்த வார்த்தையைப் போல, வசீகரமான மன எழுச்சி தரத்தக்கவேறு சொல், அரசியல் அகராதியில் கிடையாது. அன்னியனிடம் அடிமைப்பட்டுக் கிடக்கும் நாட்டிலே, இந்த வார்த்தைக்கு அலாதியான மதிப்பு இயற்கையாக ஏற்பட்டு விடுவதும், அந்த ஒரு சொற்றொடருக்குள், எண்ணற்றகற்பனைகள், கருவளவு உள்ள திட்டங்கள், ஆசாபாசங்கள் ஆகியவைகள் உள்ளடங்கி இருப்பதும் இயல்பு. எனவேதான், கவி பாடினவரும் கவிதையைப் பருகினவர்களும் நம்ம சர்க்கார் என்ற பேச்சைக் கேட்டதும், களிநடமாடினர்—கற்பனு லோகத்திலே புகுந்தனர். உண்மையை அவர்களுக்கு அன்றாட வாழ்க்கை காட்டியபோது, உள்ளபடியே, அவர்கள் திடுக்கிட்டுத்தான் போயினர்.

நம்ம சர்க்கார் என்ற சொற்றொடர், எழுச்சி தருவது, என்பது போலவே எத்தனையோ வகையான ஆட்சிமுறைகளையும் உள்ளடக்கியது.

ஜெர்மானியர், ஹிட்லரின் நாட்களிலே, நம்ம சர்க்கார் என்று தான் கூறிக்கொண்டனர் — குதுகலத்துடன் மட்டுமல்ல, — பெருமையுடன்!

முசோலினியும், இத்தாலியில் அன்னியன் அல்ல! அந்த ஆட்சியும் நம்மசர்க்கார்தான், இத்தாலியருக்கு.

எனினும் அந்த நாடுகளிலே அந்த நம்ம சர்க்கார், மக்களுக்கு ரொட்டி தருவதற்குப்பதில் குண்டுகளைத் தந்து, வாழ்வு தருவதற்குப்பதில் சாவைப் பெற்றுத்தந்தன — பிறகு தான் அந்த நாட்டுமக்களால், ஒரு ஆட்சி நம்ம சர்க்காராக மட்டும் இருந்தால் போதாது, நன்மையைச் செய்யும் சர்க்காராகவும் இருக்க வேண்டும், என்ற தெளிவு ஏற்பட்டது.

அரசியலில், தெளிவு ஏற்படுவது எளிதான காரியமல்ல — அதிலும் இந்த நாட்டிலே, மிகமிகக் கஷ்டமான காரியம்.

நம்ம சர்க்கார் என்ற எண்ணம், உழவருக்கும் அவர்களை உறிஞ்சுவதால் சீமானாகும் பண்ணையாருக்கும், ஆலைத்தொழிலாளிக்கும் அவன் உழைப்பால் உயரும் முதலாளிக்கும், ஏழைக்கும் அவனுக்குத் தர்

மம் செய்து புண்யம் தேடுவதற்காக, அவனை வஞ்சித்து பிரபுக்களானவர்களுக்கும், எல்லோருக்கும் தான், ஏககாலத்திலே ஏற்படுகிறது. நம்ம சர்க்கார் நல்ல சர்க்காராகவும் அமையவேண்டுமானால், ஏழையை வாழவைக்கும் திட்டமும், திறமும் தீரமும், இருக்கவேண்டும்—அத்தகைய இயல்பு, அந்த நம்ம சர்க்காருக்கு ஏற்பட்ட உடனே, அதனை நம்ம சர்க்கார் என்று சுறண்டிப் பிழைக்கும் சுகவாசிகள் சொந்தம் கொண்டாடிப் பேசமாட்டார்கள்.

நம்ம சர்க்கார், என்ற பொதுவான முறை, உயர்வும் சிறப்பும் பெற்று, பயன் தருவதாக மாறவேண்டுமானால், அது எல்லா வகையினராலும் நம்ம சர்க்கார், என்று சொந்தம் கொண்டாடக் கூடிய முறையிலிருந்து, விடுபட்டு, பாமர மக்கள் தங்கள் வாழ்க்கையிலே பல புதிய நலன்கள் ஏற்பட்டன என்று பூரிப்புடன் பேசுவதற்கு ஏற்றபடியான, பொதுமக்களின் பொது நலனை வளர்க்கும், சர்க்காராக மாறியாக வேண்டும்.

இந்த மாறுதல், தானாகவும் ஏற்பட்டுவிடாது, மக்களின் கிளர்ச்சி உருவெடுக்காமலும் நடைபெறாது. மாறுதல் ஏற்படுவதைத் தடுக்கவும், துவக்கப்படுத்தவும், சுறண்டல் முறையினர், முயற்சி செய்வர்—செய்யும்போது, தங்கள் சுகமும் சுயநலமும் கெடுகிறது என்று கூறுவர்—!நாடு கெடுகிறது, நம்ம சர்க்கார் இடர்ப்படுகிறது, மக்கள் மனதிலே குழப்பம் ஏற்படுகிறது, மாச்சரியம் உண்டாகிறது, அமைதி குலைகிறது, ஆள்வோருக்கு அல்லல் அதிகரிக்கிறது, பதவிபெறாச் சூழ்ச்சிக்காரரின் படைவேலை செய்கிறது, பாமரர் மனதிலே, விஷக்கருத்துத் தூவப்படுகிறது, என்று பலப்பல கூறுவர்.

இப்போது, நாட்டிலே உள்ள நிலைமை இதுதான்.

நாடாள வந்திருக்கிறது நம்ம சர்க்கார், என்று முன்னம் கவிபாடினோர் கண்டு கொண்டனர், நாட்டுக்குப் புதுவாழ்வு பிறக்கவில்லை—எதிர்பார்த்த இன்பநிலை ஏற்படவில்லை—என்பதை.

ஆனால் வெளியே கூறவோ, பலருக்குத் துணிவு இல்லை—சிலர் உண்மையிலேயே மனவேதனையால்பேச்சிழந்தனர். சிலர் வெட்கத்துக்குக் கட்டுப்பட்டு; வேறு பலவற்றிலே நேரத்தையும் நினைப்பையும் ஏவுகின்றனர். சிலர்மட்டும், நிலைமை மறைப்பானேன் என்று வெளிப்படையாகவே கூறியும் வருகின்றனர். அவர்களின் தொகை குறைவு—ஆனால் வைரத்தின் ஒளியும் மதிப்பும், வர்ணக்கண்ணாடிக் குவியலுக்கு ஏது!

தேசிய சர்க்கார் வந்துவிட்டது என்று தம்பிக்கு, கெக்கலிக்கும் சேதியை யல்லவா, கூறினர்—கவி ஒருவர்—நாடாளக் காங்கிரஸ் கட்சியினர் அமர்ந்ததும்—அந்தக் கட்சியின் ஆட்சி பலப்பல திங்களாக நடைபெற்ற பிறகும் உள்ள நிலைமையை, ஆட்சி செய்யும் பொறுப்பிலுள்ள முதலமைச்சரை முன்னாலே வைத்துக்கொண்டு, 'சந்து பொந்து' களிலே அல்ல, வானொலி நிலையத்திலே, பாடிக் காட்டுகிறார், திருச்சிற்றம்பலக் கவிராயர் என்பவர், இந்த ஆகஸ்ட் திங்களில்,

இன்றைக்கோ
வானவெளி முகடாய்
மண் தரையே பாயலெனக்
கூனியுடல் தாங்கி
குன்றுப் படை சனங்கள்
நெற்றி வியர்வைதனை
நீராக்கி, நெல்லாக்கி
குற்றுயிராய் வாழ்ந்து, பசிக்
குப்பி கொதிப்பதையும்
அவ்வேளை—
உண்டு தினம் உறங்கி
உறுத்தாத பஞ்சு மெத்தை
திண்டு சுகங் கொடுக்க
திளைக்கின்ற பணக்காரர்
ஊரான் உழைப்பதனை
உறிஞ்சி உயிர் வாழ்வதையும்
வட்டிக் கடன் கொடுத்து
வாய்தாக் கழிந்துவிட்டால்
கட்டிவச்சிக் காசைக்
கறப்பதையும்—
இருப்பில் உணவிருக்க
இருட்டில் பதுக்கி வச்சி
கருப்புக் கடை நடத்தி
காசுதனைச் சேர்த்தோன்
உருப்படியாய் நம் முன்னே
உலா வந்து போவதையும்
ஆலைத் துணிப் பெருக்கு
அலையலையாய் வந்தாலும்
சேலை துணி மணிக்கு
திண்டாடி வாடுவதும்
மானந்தனை மறைக்க
மழைக்குளிரைத்தான் தடுக்க
சாணகலத் துணியின்றி
சாவதும்—
ஆதி முதல் நம்மவர்க்கு
அகிம்சை நெறி கூறிவந்த
சூத்திரியாக் காந்திமகான்
சுடப்பட்டு வீழ்ந்ததுவும்
போதி மரப் புத்தனைப்போல்
போதம் புகன்றவனை
சாதி மத பேதச்
சழக்கு உயிர் வாங்கியதும்

ஆகிய இப்படிப்பட்ட காட்சிகளையன்றோ காண்கிறோம், என்று கவிதருகிக் கேட்கிறார், கவிராயர், வானொலி மூலம், நாட்டு மக்களை—முதலமைச்சரின் முன்னிலையிலே. கவிராயர், திராவிடர் கழகத்தாரா! அரசியல் சூழ்ச்சியா, இவருடைய அறவுரைக்குக் காரணம்? அல்லது, அவர் கூறிய 'காட்சிகள்' நாட்டு மக்கள் காணாதனவா—இட்டுக் கட்டிப் பேசுகிறாரா — என்பவைகளை எண்ணிப் பார்க்கவேண்டும், கெக்கலிக்கும் சேதி கூறினவர்கள்.

பானையெல்லாம் நெல்லுமணி
பொங்கி வழியும் இந்த
பாட்டாளி மனசுலேயும்
பாரமொழியும்

என்று பாடி, மக்களை, மகிழத் தூண்டி, மக்களாட்சி வந்துவிட்டது என்று பேசி, நாட்டுக்கெல்லாம் நல்ல சேதி கூறினபோது, எந்த நம்ம சர்க்கார் அரியாசனத்தமர்ந்ததோ, அதே சர்க்கார்தான், சட்ட சபையிலே, எதிர்க்கட்சியால் சிக்கல் ஏற்பட்டு அல்ல, நினைத்ததை நினைத்தவண்ணம் செய்துமுடிக்கத் தக்கு தடையற்ற பலம் பொருந்திய பெருவாரிக் கட்சியாக விளங்குகிறது—எனினும்,

இப்படியாய்
எத்தனையோ காட்சிகளை
இன்றளவும் காணுகின்றோம்

என்று கவிராயர் பாடவேண்டிய நிலைதான், நாட்டிலே இருக்கிறது, ஏன்? நம்மசர்க்கார் என்று சொந்தம் கொண்டாடி மகிழும் நண்பர்கள், யோசிக்க வேண்டாமா! நம்ம சர்க்காரிலும் ஏன் நாட்டிலே,

நெற்றி வியர்வைதனை நீராக்கி,
நெல்லாக்கிய

நல்லவர்களின் வாழ்வு, வேதனை சூழ்ந்ததாக இருக்கிறது? இதை எடுத்துக்கூறிப் பரிகாரம்தேடமுயற்சித்த நம்மகட்சி நண்பர் நாராயணசாமி நம்மசர்க்காராலேயே, சிறையிலே தள்ளப்பட்டிருக்கிறாரே, ஏன்?

இதைக்கண்டித்து நம்ம கட்சியினரான M. L. A. க்கள் பலர், நம்ம மந்திரியிடம் கூறியும் பலன் ஏற்படவில்லையே, ஏன்? சோந்தத்திலே சர்க்காரு வந்திருக்குதாம்—எல்லாம் சோகமாக வாழவழி போறந்திருக்குதாம், என்று கவிபாடிக்களிப்பூட்டினாரே, நிலைமையோ கவலையைத்தானே மூட்டுகிறது, அதனைக் கவிராயர் பாடியபோது, துக்கம் பீறிட்டுக்கிளம்ப, அதைவெட்கம்விரட்ட, அந்த வெட்கத்தை விழ்த்துமளவுக்குக் கோபமும்பிறக்கிறதே, ஏன் நம்மசர்க்காரால், நமது எண்ணங்களை ஈடேற்ற முடியவில்லை—ஆற்றல் இல்லையா—வழிதோன்ற வில்லையா—அல்லது இது, நம்மசர்க்கார் என்று நாம்தான் பாத்யதை கொண்டாடுகிறோமேதவிர, உண்மையில், நாட்டுப் பெருவாரியான மக்களின் நலனைக் கவனிக்காத சிறுகூட்டத்தாரின் சர்க்காரா, என்னதான் விஷயம், என்று யோசிக்க வேண்டாமா, காங்கிரசிலே உள்ள நல்லவர்கள். யோசித்தனரோ!

அந்த யோசனையும், அதிலேதெளிவும் ஏற்பட, ஏற்பட்டு நல்லதீர்ப்புக் கிடைக்க, நண்பர்கள், முதலிலே, நம்மசர்க்கார் என்ற கொஞ்சுமொழிக்குள்ளே, என்னென்ன வஞ்சகமும் நஞ்சும் கலந்து கொண்டுவிட முடியும், என்பதை யூகித்தறிய வேண்டும்—இதற்குப் பாசமும் பயமும் தளரவேண்டும்—தேயவேண்டும்—நம்மசர்க்காராயிற்றே, என்ற பாசமோ, நம்ம சர்க்காரைக் குறைகூறினால், கண்டித்தால், திருத்தமுற்பட்டால், மற்றக்கட்சியினர் கேலி செய்வரே, ஒருவேளை அவர்களின் கரம் வலுத்துவிடுமோ, என்ற பயமோ இருந்தால், எண்ணவும்முடியாது,எண்ணமுயன்றாலும்தெளிவும் ஏற்படாது—இந்தப் பாசத்தையும் பயத்தையும்பயன்படுத்திக்கொண்டு ஒரு சிறு கூட்டத்தார்—பாசீசத்தை அமைத்துவிட முடியும், அதையும் அவர்கள், நம்மசர்க்கார் என்றே கூறுவர், நாட்டுமக்களை நம்பும்படி செய்யவும் முடியும்—நம்ப மறுப்பவர்களை நசுக்கிவிடவும் முடியும். எனவேதான், இப்போதே, திருத்துவதற்குத் திறமும் நேரமும் உள்ள போதே, எண்ணத்தொடங்குங்கள், ஏன் நம்மசர்க்கார் திருச்சிற்றம்பலத்தார் தீட்டிடும் நிலையை நாட்டிலே இருந்திடச் செய்கிறது, என்பது பற்றி.

எங்களைமறந்து, இந்தச் சிந்தனையில் ஈடுபடவேண்டுகிறோம், காங்கிரஸ் நண்பர்கள்.

எங்கள்மீது வீசப்படும் 144, 151, 41, 107, 106, 75 முதலிய செக்ஷன்களைக் கவனப்படுத்தியல்ல; உங்கள் ஆட்சியிலே, என்னென்ன இன்பக்காட்சிகள் காணலாம் என்று எண்ணினீர்களோ, அவைகள் தோன்றாமல், திருச்சிற்றம்பலத்தார் சுட்டிக்காட்டிடும் காட்சிகள் காணப்படுகின்றனவே, அவைகளைக்கவனப்படுத்திக் கேட்கிறோம் — எண்ணிப் பார்த்தீர்களா, ஏன் நம்மசர்க்கார் இருந்தும் நாடு இவ்விதம் இருக்கிறது என்பதுபற்றி. முயற்சித்துப் பாருங்கள்—!

●

## அவருடைய ஆராய்ச்சி

7-ம் பக்கத் தொடர்ச்சி

றன என்று சேக்கிழார் கூறியதையும் மறுத்து, இயற்கையையும் சாதாரண அறிவையும் முன்னிலைப்படுத்தித் தம்முடைய ஆராய்ச்சியை முடித்திருக்கலாம். நமது அன்பர், யானையும் குதிரையும் வான்வழிச் சென்றன என்பதைத் 'தெய்வீகம்' என்று கருதி ஒருவேளை ஆராயாது விட்டாரோ என்னவோ! ஏனென்றால், இவர் தம்முடைய முகவுரையில்,

> “இந்த ஆராய்ச்சிச் செய்திகளில் சமயத் தொடர்பான—கருத்து வேறுபாடுகட்கு இடமான—செய்திகள் இடம் பெற்றில. அவற்றை ஆராய்வதும் இம்முயற்சியின் நோக்கமன்று.”

என்றுகுறிப்பிட்டிருக்கிறார்.எனவே, யானையும் குதிரையும் வானத்தில் பறந்த செய்தியை இவ்வன்பர் “சமயச் சார்பான—கருத்து வேறுபாடுகட்கு இடமான” செய்தி என்று கருதி ஆராயாமல் விட்டிருக்கலாம். ஆனால், மேற்கே போகிறவன் வடக்கே போக முடியாதென்பதை வலியுறுத்துமளவுக்குச் “சமயச் சார்பு” இடந்தரும்போது, இயற்கைக்கு மாறாக யானையும் குதிரையும் பறந்தன என்பதை மட்டும் மறுக்குமளவுக்கு அச்சொல்லப்பட்ட “சமயச் சார்பு” ஏன் இடந்தரவில்லை என்பது வியப்பாகவே இருக்கிறது. யானையும் குதிரையும் வானத்தில் பறக்கும் போது, மேற்கே போகிறவனும் வடக்கே கட்டாயம் போய்ச் சேரமுடியும்—'தெய்வீக'த்தில் நம்பிக்கையுள்ளவர்கள் இதனை மறுக்கமாட்டார்கள் என்பதனை நமது அன்பர் அறிந்து, அதன்படி தம்முடையஆராய்ச்சியை நல்ல முறையில் அமைத்திருக்கலாம். இவ்வாறு ஆராய்வதைச் சமயச் சார்பு பற்றிய முரண்பட்ட செய்திகள் என்றோ, கருத்து வேறுபாடுகட்கு இடந்தரும் செய்திகள் என்றோ எவரும் கருதமாட்டார்கள். இனி இன்னொன்றையும் நமது அன்பருக்குநினைவூட்ட விரும்புகிறோம். அதாவது சுந்தரும் சேரமானும் வான்வழிச் சென்றனர் என்பதையோ கடல்வழிச் சென்றனர் என்பதையோ குறிப்பிடாத நம்பியாண்டார்நம்பியும்,சேரமானும் சுந்தரும் கடல்வழிச் சென்றனர் என்று படம் எழுதிய தஞ்சை ஓவியரும் சமயச்சார்பற்றவர்கள் என்று கூறிவிட முடியாது எனவே அவ்விருவர் கூறிய வழிகளில் ஏதாவதொன்றில் சேக்கிழாரும் சென்று தம்முடைய பெரியபுராணத்தைப் பாடியிருக்கலாம் என்று நமது அன்பர் நடுநிலைமை தாங்கித் தம்முடைய ஆராய்ச்சியை எழுதியிருக்கலாம். இதனால், இவருடைய நோக்கம் எவ்வகையிலும் கெட்டுவிடாதென்பதை இங்கு எடுத்துக்காட்ட விரும்புகிறோம்.

எனவே, நம்பியாண்டார் நம்பியால் கூறப்படாத சுந்தர—சேரரின் கடல்வழிச் செல்லவையும்,விண்வழிச் செலவையும்பற்றிய எதனையுமே சேக்கிழார் குறிப்பிடாமல், சுந்தரும் சேரமானும் கயிலை சென்றனர் என்ற அளவோடு கதையை முடித்திருக்கலாம் என்று நமது அன்பர் தமது ஆராய்ச்சியில் எழுதியிருக்க வேண்டும். அல்லது நமது அன்பருக்குக் கல்வெட்டுகளிலும் ஓவியங்களிலும் நம்பிக்கை இருக்குமானால், தஞ்சைப் பெரியகோயிலில் காணப்படும் ஓவியத்தின்படி அவ்விருவரும் கடல்வழியே கயிலை சென்றனர் என்பதையாவது உண்மையென ஒப்புக்கொண்டு தம்முடைய ஆராய்ச்சியை முடித்திருக்கவேண்டும் அங்ஙனமன்றிக், கல்வெட்டில் இல்லாத ஒன்று — நம்பியாண்டார் நம்பியால் கூறப்படாத ஒன்று—சேக்கிழாரால் கூறப்பட்டதென்பதற்காக மட்டும் ஒப்புக்கொள்ளப்பட்டு அதன்படிதம்

(12-ம் பக்கம் பார்க்க)

# அவர்களே கூறுகிறார்கள்!

அறிவு வளராமல், ஆற்றல் பெருகாமல், நாகரிகம் நனி சிறக்காமல், குகைகளே இல்லமாய், சமைக்காத காயும் கனியும் கிழங்குமே உணவாய் மரப்பட்டையும் இலையுமே நல்லாடையாய் மேற்கொண்டு வாழ்ந்து வந்த நமது முன்னோர்களுக்கு, தக்ளியும், இராட்டையும் புரட்சிகரமான நூல் நூற்கும் சாதனங்களாகவற்பட்டன. அவைகள் கண்டு பிடிக்கப்பட்ட காலத்தில், நூல் நூற்பதற்கு அதனைக் காட்டிலும் வேறு கருவிகள் கிடைக்காததால், பலகாலம் அந்த இரண்டையுமே நம்பி வாழ்ந்தனர் மக்கள். அத்துறையில் ஆர்வமும் காட்டினர். அவர்கள் இருந்த காலத்தில் நாம் இருக்கவில்லை. நூல்நூற்கும் துறையில் எவ்வளவோ முற்போக்கான இயந்திரங்கள் வந்துவிட்டன. இன்று மக்களுக்கு வேண்டிய ஆடைகளுக்குத் தேவையான நூல்களை, இந்தத தக்ளியாலும் இராட்டையாலும் நூற்றுத் தர முடியாது. நாம் ஒவ்வொருவரும் நூற்பதென்று கண்டிப்பாக மேற்கொண்டாலும், போதிய ஆடைக்கான நூலைக்காண முடியாது. உறுதியான நீடித்தநாள் உழைக்கக் கூடிய ஆடையும் அதனால் உருவாகாது. இதற்காக எடுத்துக் கொள்ளும் முயற்சியும், செலவு செய்யப்படும் நேரமும், உபயோகப்படுத்தப்படும் பஞ்சும், ஓட்டைத் தோண்டியால் நீர்மொண்டு நிலத்துக்குப் பாய்ச்ச முனைந்தால் கிடைக்கும் பலன்தான் இதற்கும் சம்பவிக்கும்.

எந்தத்தத்துவப்படி பார்த்தாலும், கதர்த்திட்டம் உருப்படாது என்று நாம் பலகாலமாகவே கூறிவந்திருக்கிறோம். பயிரிடுவதற்குச் செலவாகும் காலம்போக மீதமுள்ள காலத்தில், வேறுதொழில்கிடைக்காத மக்களுக்கு இந்நூற்கும் திட்டம், வாழ்க்கைக்குவசதிசெய்கிறதுஎன்று வாய்வலிக்கப் பேசினார்கள் சிலர். நாளெல்லாம் வேறு வேலையை கவனிக்காமல், புகையிலைக் காம்பிற்காகும் செலவைக்கூடச் சரிகட்ட முடியாத, நூற்கும் தொழிலை மேற்கொள்ள மக்களைத் தூண்டுவது, மக்களின் உழைக்கும் ஆற்றலைப் பாழ்படுத்துவதாகும் என்றும் அறிவித்தோம்.

தேச பக்தியின் காரணமாக, மக்களிடம் நன்கொடையாகப் பெற்றபலகோடி ரூபாயைக் கொட்டி அழுத பின்னரும், தலைவர் முதல் தொண்டர்கள் ஈறாக கதர் கதர் என்று கதறிப் பார்த்த பின்னரும், நாட்டிலுள்ள ஏடுகள் பலவும் நாள் தவறாமல் கதரின் பெருமையைக் குறித்து அளவுக்கு மீறிப் பத்தி பத்தியாக எழுதிய பின்னரும், ஆலை அரசுகள் கதர்த்திட்டத்தைப் பணம் கொடுத்தும் பிரசாரம் புரிந்த பின்னரும், ஆளுவோரும் திட்டத்தைத் தீவிரமாக நடைமுறையில் கொண்டுவர லட்சக் கணக்கில் பணத்தைப் பாழ் பண்ணிய பின்னரும், மக்களிடத்தில் அதற்கு ஆதரவு கிடைக்கவில்லை.

அன்று ஆர்வம் காட்டிய மக்களுக்கும் இன்று அலுப்புத்தட்டிவிட்டதாம். உற்சாகம் ஒருதுளியும் இல்லையாம். தமக்குத் தலைவலியை உண்டாக்குவதற்கான காரணங்களிலே அதுவும் ஒன்றாகும். கிராம முன்னேற்றத்திற்கெனப் புதிதாக வந்திருக்கிறாரே, அவர்தான் டாக்டர் குருபாதம், குறிப்பிடுகிறார், கதர்பற்றி சட்டசபையில் எழுந்த கேள்விக்குப் பதில் கூறும்பொழுது.

தமக்குத் தலைவலியை உண்டாக்கும் காரணங்களிலே, இந்தக்கதரும் ஒன்று!

குறிப்பிட்ட ஒரு இடத்தில்மட்டுமல்ல, நாடெங்கும், சென்றவிடமெல்லாம், மக்களின் ஆர்வம் மங்கிப்போய்விட்டது கதர் விஷயத்தில் என்று அவர் கூறுகிறார். அத்துடன் திருப்திப்பட்டுவிடவில்லை. ஒரு அங்கத்தினர் மேலும் கேட்டார், உற்பத்திசெய்கிறவர்களிடத்திலும் கதர் வாங்குகிறவர்களிடத்திலும் மட்டுமா இந்த ஊக்கக்குறைவுஎன்று. இதற்கு மந்திரியார் கூறினார், இருசாராருக்குந்தான் என்பதுமட்டுமேல்ல, நாட்டு மக்கள் அனைவருக்குந்தான் கதர் விஷயத்தில் ஆர்வம் இல்லை என்று.

டாக்டர் குருபாதம் நாடாளும் மந்திரியாவார். கதரன்றிவேறுஅணிவதில்லைஎன்றும் விரதம்பூண்டொழுகுபவராம். அவர் சொந்தத்தில் நூல் நூற்று, நூற்ற நூலைக்கொடுத்துத்தான் கதர் வாங்கி அணிகிறாரோ என்னவோ நமக்குத் தெரியாது! ஆனால் அவருக்கும் கதரில் இருந்த ஊக்கம் குறைந்துபோய்த்தான் இருக்க வேண்டுமென்று, அவர் வாயுரையிலிருந்தே அறிந்துகொள்ளுகிறோம்.

அவர் காங்கிரஸ் கட்சியைச்சேர்ந்தவர். அவரே கூறுகிறார்,கதர்த்திட்டத்திற்கு நாட்டில் நல்ல மதிப்பில்லை என்று. இதனை நாம் அன்றே கூறினோம்! இவ்வளவு ஆண்டுகள் பிடித்தது, அவர்களே கதரின் பயனற்ற தன்மையை எடுத்துக்கூற!

“சிறை’ செல்வது,
இராட்டையில் நூல் நூற்பது,
ஹிந்தி கற்பது

முதலியன அடிமைஇந்தியாவில் ஒருவேளை தேசசேவையாக இருந்திருக்கலாம். ஆனால் இன்றுசுதந்திர இந்தியாவில், நாட்டைச் செல்வச் செழிப்புடையதாகவும் பலம் பொருந்தியதாகவும் ஆக்குவதற்கு செய்யப்படும் செயல்கள்தான் நாணயமான பணியாகும்”

இவ்வாறு ஈரோட்டில் நிகழ்ந்த கூட்டமொன்றில், கனம் கோபால் ரெட்டியார் குறிப்பிட்டுள்ளார்.

இராட்டையில் நூல் நூற்பது நாணயமற்றது!

இந்தி கற்பது நாணயமற்றது!

இராட்டையில் நூல் நூற்பது, நாட்டின் செல்வத்தைப் பெருக்காது; நாட்டையும் பலம் பொருந்தியதாக ஆக்காது: இது நாம்சொல்வது அல்ல; மந்திரி கோபால் ரெட்டியார் கூறுவது.

இந்தி கற்பது நாணயமற்றது என்றும்கூறும் கனம் கோபால்ரெட்டியாருக்கு, இந்தியைப்பள்ளிகளில் கட்டாயப்படுத்தும் கல்வி மந்திரியாரின் திட்டம் தெரியாமல் இருப்பதற்கில்லை. தெரிந்திருந்தும் பேசுகிறார், இந்தி கற்பதுநாணயமற்றது என்று!

எது எப்படியானாலும் ஒரு மந்திரியாருக்கு, கதர்த்திட்டம் தலைவலியைக் கொடுக்கிறது. மற்றொரு மந்திரியாருக்கு இந்தி கற்பதும், நூல் நூற்பதும் நாட்டுக்கு நலஞ் செய்யாத நாணயமற்ற செயலாகத் தோற்றமளிக்கிறது.

நாம் பலகாலமாகக் கூறினதை இன்று அவர்களே கூறுகிறார்கள் என்பதை, அதுவும் பொறுப்புள்ளவர்கள் சொல்லுகிறார்கள் என்பதைக் கண்டு மகிழ்கிறோம்.

## வெட்கப்படவேண்டும்

16-ம் பக்கத் தொடர்ச்சி

கேள்வி கேட்பவர்கள் இருந்தார்கள். ஆனால் அதற்குப்பதில்சொல்ல ஆட்கள் தான் இல்லை. மந்திரிகள் பன்னிருவரில், மூன்று ஆந்திர மந்திரிகள் தவிர, மற்ற மந்திரிகள் அனைவரும் வெளியூர்களில் சுற்றுப்பிரயாணம் செய்யப்போய்விட்டார்கள். சட்டசபையின் லீடர் கனம் கோபால் ரெட்டிகாரும் வெளியூர் சென்றுவிட்டார்.

தாங்கள் வகிக்கும் பதவியின் தகுதி, தன்மை, தெரிந்தவர்களாக இந்த மந்திரிமார்கள் இருந்திருந்தால் சட்டசபை நடக்கும் காலத்திலும் வெளியூர்களில் பிரயாணம் செய்து கொண்டிருப்பார்களா? தாங்கள் வகிக்கும் பதவிக்கேற்ப, தாங்கள் மக்களுக்குச் செய்யவேண்டிய பணி சட்டசபையில் இருக்க, தங்கள் கடமையை இருந்த இடத்திலிருந்து செய்யவேண்டியதைவிட்டு, வேறு இடத்தில் வீண் வம்பு அளக்கவும், விருதுகள் பல பெறவும், உல்லாச யாத்திரை சென்றுவிட்டு வருவது, இந்தத் தியாகிகளால் அன்றி வேறு எவராலும் கருதக்கூட முடியாத காரியமாகும்.

பிரதமர் வேண்டிக்கொண்டாராம்—எச்சரித்தாராம்—சட்டசபை நடைபெறும் காலங்களில் மந்திரிகள் வெளியூர்களுக்குச் செல்லக்கூடாது என்று. கேளாக் காதர்களாகவே இருக்கிறார்கள் மந்திரிகள்!

முன்னர்தான் காந்தியார் திருநாமம் உதவிற்று, தாங்கள் செய்து கொண்டதாகச் சொல்லப்படும் தியாகம் உதவிற்று, இனி எது உதவும் இவர்களை மீண்டும் மந்திரிகளாக ஆக்குவதற்கு. மக்களிடம் கூறவேண்டுமே—தாங்கள் மந்திரிகளாக இருந்து சாதித்தவைகளை. பலர், பரமன் மீது பாரத்தைப் போட்டுவிட்டு பேசாமடந்தைகளாக இருந்துவிட்டாலும், சிலராவது சினந்து கேட்பார்களே, 'சாதித்ததைக் கூறுங்களய்யா' என்று.

வாங்கின, வாங்குகிற சம்பளத்தைக் கூறுவதா?

சம்பளத்தையும் மீறுகிற பிரயாணப்படிச் செலவையும் கூறுவதா?

சொந்தக்காரர்களுக்குத் தேடித் தந்தத் தொழிலைக் கூறுவதா?

தங்கள் வாழ்வை வளமாக்கிக் கொண்டதைக் கூறுவதா?

இந்தியை நுழைத்துவிட்டுத்தமிழர் வாழ்வைத் தரைமட்டமாக்க எடுத்துக் கொண்ட தகாத செயலைக் கூறுவதா?

வேண்டாமென்றோர் மீது தடியடியும், சிறைத் தண்டனையும்தந்து வருவதைக் கூறுவதா?

இந்தியன் பெனல் கோட் உண்டு உங்கள் செயலை ஒடுக்க, போலீஸ் உண்டு உங்களை அடக்க, அதுமீறினால் அழைத்த குரலுக்கு ஓடிவர இராணுவமுண்டு என்று இறுமாப்போடு ஆண்டோம் அன்று; இதோ வந்திருக்கிறோம் உங்கள் முன்னால் இன்று என்று மௌனத்தால் உணர்த்துவதா?

எதைக் கூறப்போகிறார்கள்? வெட்கத்தால் தலை கவிழ்ந்து, சொல் விழுந்து, சோர்வுபட்டு நிற்பதைக் காட்டிலும் வேறெதனைத்தான், சில நாள் சென்றபின் இவர்களிடத்தில் எதிர்பார்க்கமுடியும்?

எதிர்காலத்தில் இவர்களுக்கு இந்த வாழ்வளித்த, வாக்காளர் மட்டுமா, இவர்களை மடக்கிக் கேட்கப் போகிறார்கள். வாக்குரிமை இல்லாத, விற்பனை வரிகொடுக்கும் ஒவ்வொருவரும் அல்லவா கேட்கப்போகிறார்கள். அதிகாரத்திலுள்ள இந்த நிலையிலேயே, அதிகாரமிழந்த பின்னர் பொதுமக்கள் தங்களைக் குறித்து என்ன நினைப்பார்கள், எவ்வாறு கேலியாகப்பேசுவார்கள், என்பதைக் கொஞ்சம் கற்பனை செய்து பார்க்கட்டும் இவர்கள். அந்தக் கற்பனை ஓவியம், இன்று ஆத்திரத்தைத்தான் மூட்டும், அழைப்போமா போலீசை, ஏவிடுவோம் இவர்களை அடக்க, எனும் எண்ணத்தைத்தான் கொடுக்கும், அதிகார பீடத்தில் கொலுவீற்றிருக்கிற காரணத்தால்.

மக்களை மதியாது, அதிகாரத்தையே பெரிதென நம்பி, இராணுவத்தைத் துணைக்குக்கொண்டுதரணியாண்ட சாம்ராஜ்யாதிபதிகள் பலர், தங்கள் வாழ்நாளிலேயே, தங்களை சர்வ ஜாக்கிரதையாகப் பாதுகாத்துக் கொண்டுவந்த நேரத்திலேயே, தரைமட்டமாகிவிட்ட கதைகளைக் கூறும் ஏடுகளைப் புரட்டிப்பார்க்க வேண்டும் இவர்கள். பொதுமக்கள் செந்தீ; இவர்கள் வெறும் சருகு!

இங்கிலாந்தில் ஒரு நாள், சர்வாதிகாரி கிராம்வெல்லைக் காணவேண்டுமென்று மக்கள் ஆரவாரம் செய்தனர் அவன் வீட்டு முன்னால் கூடிக் கொண்டு. அவனுடைய தளபதிகள், கிராம்வெல்லை நோக்கி, 'தங்களிடம் எவ்வளவு உற்சாகம் மக்கள் கொண்டிருக்கிறார்கள் பார்த்தீர்களா' என்று கேட்டனர். அதற்கு கிராம்வெல் கூறினான், 'இது ஒரு பிரமாதமா? என்னைத் தண்டிக்கும் பொழுது, இதைவிடப்பெருந்திரளான மக்கள், இதைக் காட்டிலும் அதிக உற்சாகம் காட்டுவார்கள்' என்று.

அதிகாரம் கிடைத்துவிட்டது என்று, அதன் பளபளப்பிலே மயங்கி, மனிதத்தன்மையை இழந்து நடந்துகொண்டால், எந்த அதிகாரம் தனக்குச் சுகம் தருவதற்கு ஏதுவாக இருந்ததோ, அந்த அதிகாரமே முடிவில் தனக்கு உயிர்க்கொல்லியாக முடிவுறும்.

மக்கள் வாக்குகளைப் பெற்று அதிகாரத்தில் அமர்ந்த பின்னர், மக்களுக்கு நலஞ்செய்யாது, மக்களைத் துச்சமென மதித்து நடத்துகிறவர்கள், அதிகாரம் தம் கைவிட்டுப் போன பிறகு மக்களைக் காணவும் கூசுவர்; வெட்கப்படவேண்டிய நிலையும் ஏற்படும்.

✻

10-ம் பக்கத் தொடர்ச்சி

முடைய ஆராய்ச்சிக்கு முடிவு கண்டது கண்டு நாம் வருந்துகிறோம்.

இன்னும் நமது அன்பரின் பெரியபுராண ஆராய்ச்சியில் ஆராய்ச்சிக்குரியன பல உள. விரிவஞ்சி இவ்வளவில் முடிக்கிறோம். எனவே, நமது அன்பர், மக்களின் வாழ்க்கைத் துறைக்கு எந்தவகையிலும் பயன்படாத வரலாற்றுக்குக் காலவரையறையும், கல்வெட்டுச் சான்றுகளும் கண்டுபிடித் தெழுதப்பட்ட நூலின் விலை ரூபா ஐந்தாக இருப்பதாலும், பல அச்சுப்பிழைகள் இருப்பதாலும் இந்நூலை மிகுதியாக எவரும் வாங்கமாட்டார்கள் என்பதும், வாங்கினாலும் பிழையின்றிப் படித்துப் பொருள் உணர முடியாதென்பதும் நமது நம்பிக்கையாகையால் இந்நூல் நாட்டில், படித்தவர்களிடையேயும் பாமரரிடையேயும் பரவாதமுறையில் இதனை ஆராய்ந்து அச்சிட்டு உதவி செய்த அன்பருக்கு நமது நன்றி உரியதாகுக.

✻

# பர்மாவைப் பாருங்கள்

பர்மா, இன்று விடுதலை பெற்றுள்ளது அரசியலில். ஆங்கில ஏகாதிபத்தியப் பிடியிலிருந்த நிலைக்கும், இன்றுள்ள நிலைக்கும் வேற்றுமை உண்டு. கீழ்நோக்கும் தன்மையில் அல்ல; முற்போக்கில் புதிய நிலை ஏற்பட்டிருக்கிறது.

பர்மிய மக்களின் நல்வாழ்வுக்கு, நல்லதோர் பாதை வகுக்கும் பணியில், அந்நாட்டு அறிஞர்கள் முயன்றிருந்தால், இன்று பர்மாவில் ஏற்பட்டிருக்கும் உள்நாட்டுக் குழப்பத்திற்கு இடமிருந்திருக்காது. முழு அதிகாரமும் தங்களுக்கே வேண்டும் எனும் முனைப்பில், நாட்டுத் தலைவர்கள் அனைவரின் முயற்சியும் இருப்பதால் தான், கொலை கொள்ளை முதலியன, அந்த அரசியல் வாழ்வில் முதலிடம் பெற்றுள்ளன. வலதுசாரி, இடதுசாரி எப்போக்கினரும் மக்கள் நலத்தை முன்னிலைப்படுத்திச் செயலாற்றுவதாக இருக்குமானால், பர்மிய மக்களுக்கு இன்று ஏற்பட்டுள்ள அவல வாழ்வு ஏற்பட்டிருக்கவே அவசியமில்லை.

பர்மிய மக்கள் வெறும் சுகஜீவிகள். சும்மா இருப்பதே சுகம் எனும் பண்புடையோர் அந்த இனமக்கள். பெண், மது, சூது, போதை முதலியனவே பெரும்பாலான பர்மியர் விரும்புவது.

பர்மா நாட்டின் வரலாறும் கடந்த 120 ஆண்டுகளாக, சிறப்புக்குரியதாக இருக்கவில்லை. சதா சண்டை சச்சரவிலுமே பர்மா சீர்கெட்டு வந்திருக்கிறது. 1826-ல் அர்கான், டெனஸரிம் பிரதேசங்களை இந்தியாவோடு இணைத்துக்கொண்டனர். 1885-ல் தாய்-பா எனும் பர்மிய அரசனையும் நாட்டைவிட்டு விரட்டிவிட்டனர். பர்மாவும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் ஒரு அங்கமாக்கப்பட்டது.

நெல், தேக்கு, எண்ணெய் ஆகியவைகள் அங்கு விளையும் முக்கிய பொருட்கள். வெள்ளையர் சுரண்டலுக்கு, இது நல்ல வேட்டைக் காடாயிற்று. பிரிட்டிஷார் வசம் தொழில் சிக்கின. வியாபாரத்துறையைச் சீனர்கள் கைப்பற்றிக்கொண்டனர். வட்டித் தொழில் செய்துவந்த செட்டிமார்கள், பின்னர் பர்மாவின் மிட்டா மிராசுகளாகப் போய்விட்டனர். பர்மா வாழ் பர்மியனுக்கு, இந்த நிலை, எவ்வித மனப்புழுக்கத்தைக் கொடுத்திருக்கும் என்பதைக் கற்பனை செய்தே எவரும் அறிந்துகொள்ளலாம். தொழிலுக்கு வெள்ளையர், வர்த்தகத்துக்குச் சீனர், நிலங்களுக்குச் சொந்தக்காரர் தமிழர். சொந்த நாட்டில்—பிறந்து வளர்ந்த இடத்தில், பிறநாட்டவரின் கூலிகள்—எடுபிடிகள் பர்மியர்கள். கடுகளவு மான உணர்ச்சி உடையவர்களும் ஒப்புவரா இதனை? இந்நிலைமை—இழிந்த வாழ்வை சுக்குநூறாக நொருக்கத்தானே, சுயமதிப்பில் நாட்டமும், நல்வாழ்வில் நம்பிக்கையும் கொண்டவர்கள் முந்துவர்?

இருந்தாலும் பர்மியர்கள் உறங்கிக் கிடந்தனர் பன்னெடுங்காலமாக. பிறர் வாழ்வதை, அதுவும் தங்கள் உழைப்பால், அதுவும் தாங்கள் பிறந்து வளர்ந்து மடியும் நாட்டில், அதுவும் உழைக்கும் தாங்கள் வாழ்விழந்து கிடக்கும் நேரத்தில், சகித்துக் கொண்டிருந்தனர். சுரண்டல்காரர்களுக்குச் சங்கடம் எதுவும் விளைவிக்காமல் எவ்வளவு காலத்திற்குத் தான் பிறருக்கு இந்தச் சுக வாழ்வு சாத்தியமாகும். அதற்கும் முடிவேற்பட்டுவிட்டது. கடந்த பதினைந்து இருபது ஆண்டுகளுக்கு முன்னர் கல்விகற்ற சிலர், மேல்நாடுகள் பலசென்று ஆங்காங்குள்ள மக்களின் வாழ்வின் வளமும், ஆட்சி முறைகளும் தெரிந்துவந்த சிலர், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தோடு இணங்கி வாழ மறுத்துவிட்டனர் எதிர்த்துப் பேச ஆரம்பித்தனர். ஆங்கிலேயர்கள் உள்பட வேற்று நாட்டினரால், தங்கள் நாட்டின் செல்வ நிலை சீர்குலைந்ததை விளக்கினர் உலக மக்களுக்கு. அதற்கு மேல் அவர்களால் ஒன்றும் செய்யமுடியவில்லை. எந்த மக்களுக்காக அவர்கள் பரிந்து பேசினார்களோ, அதே மக்களுக்கு இருந்த மனவளம், மேலும் தொடர்ந்து செயலாற்றுவதற்கு முடியாத நிலையை அவர்களுக்குத் தந்தது.

எதிர்த்தோர்களை அணைத்துக் கெடுக்கும் ஆங்கிலேயர்களின் ஆலிங்கனமும், பட்டம், பதவி பாசக் கயிறுகளும் பர்மியத் தலைவர்களை, விடுதலைப் பணியில் சொல் வீசும் பணியோடு நிறுத்திவிட்டது.

1938-ல் ஏகாதிபத்தியத்திற்கு விரோதமாகக் கிளர்ச்சி செய்த காரணத்திற்காக காலஞ் சென்ற அவுங்சானும், இன்றைய பிரதமர் தாகின்நூவும், மற்றுஞ் சில முக்கியஸ்தர்களும் பெரு சிறைச்சாலையில் அரசாங்கத்தின் விருந்தினர் ஆயினர். அங்குதான் பொதுவுடைமைத் தத்துவங்களையும், சைனாவின் உள்ள நாட்டுக் குழப்பத்தின் போக்கையும் தெரிந்துகொள்ளும் சந்தர்ப்பம் அவர்களுக்கு உண்டாயிற்று. சீன கம்யூனிஸ்ட்டுக் கட்சியின் தலைவரின் வீரச் செயல், அவர்கள் உள்ளங்களில் அப்படியே பதிந்துவிட்டது. அவர் எழுதின நூற்களும், சிறைச்சாலைக்குக் கள்ளத்தனமாகக் கொண்டுவரப்பட்டன.

ஜப்பானியப் படையெடுப்பும் ஏற்பட்டுவிட்டது. அவுங்சானும், அவருடைய தோழர்களும் ஜப்பானியரோடு சேர்ந்துகொண்டு, ஏகாதிபத்தியப் பிடியிலிருந்து பர்மாவை விடுவிக்கும் பணியில் ஈடுபட்டனர். இத்தருணத்தில், அவுங்சான் போக்கினை வெறுத்துக் கம்யூனிஸ்டுகள் ஆங்கிலேயருடன் ஒன்றுபட்டனர். தாராளமாகக் கம்யூனிஸ்டுகளுக்கு போர்க்கருவிகள் வழங்கப்பட்டன.

இந்த நேரத்தில்தான் பர்மிய மக்களுக்கும் உறக்கம் கலைந்து, தங்கள் உண்மை நிலையை உணர்ந்துகொள்ளும் நிலை ஏற்பட்டது. நன்கு அறிந்துகொண்டோ அறியாமலோ பர்மிய மக்களில் பெரும்பாலோர் இடதுசாரிகளாகத் தோற்றமளிக்கின்றனர்.

ஜப்பான் தோற்கடிக்கப்பட்டபின்னர், பர்மாவிற்குத் தேசிய விடுதலையும் கிடைத்துவிட்டது. பாஸிஸ்ட் எதிர்ப்புக் கட்சியின் தலைவரான அவுங்சானும் பிரதமராகப் பதவி ஏற்றார். நேற்றுத் தோன்றிய சிறுபையனுக்கு இத்தகைய செல்வாக்கா—அவனா அந்த ஆட்சிப்பீடத்தில் அமர்ந்திருப்பது — அவன் எவ்வழியா தம்போல 'கனம்கள்' அடக்கி வாழ்வது—எனும் பொறாமைத் தீ மூண்டெழுந்தது முன்னாள் அரசியல் சூதாடிகளின் உள்ளங்களில், சதி செய்தனர், அவுங்சான் உள்ளிட்ட அவருடைய தோழர்களுக்கு. சுட்டுக்கொன்றனர். சில விநாடிகளில் அவுங்சானும் தோழர்களும் ஆவி பிரிந்தனர். அவர்களின் உயிர் நீங்கிய உடலங்கள் இரத்தச் சேற்றில் அமிழ்ந்தன.

பின்னர் தாக்கின் நூ பிரதமர் பதவி ஏற்றார். அவராலும் அதிக நாள் அதிகாரத்தில் அமர்ந்திருக்க முடியவில்லை. சென்ற திங்களில் அவர் மந்திரிசபையும் அதிகாரத்தை விட்டு விலகியது. ஆட்சித் தலைவர் வேண்டுகோளுக் கிணங்க இடைக்கால சர்க்காரின் தலைவராக, அவரே பதவி ஏற்றார். மறுபடியும் அவரே பிரதமராகியுள்ளார். மற்ற மந்திரிகளையும் அவர் விரைவில் தேர்ந்தெடுத்துக்கொள்வார். ஜப்பான் பிடியில் பர்மா இருந்தகாலத்தில், அதன் பிரதமராக இரண்டாண்டு இருந்திருக்கிறார் இவர்.

முன்னாள் வெளிநாட்டு மந்திரியாக இருந்த யு டின் டட் என்பாரையும் சென்ற வாரத்தில், அவர் ஒரு மோட்டாரில் சென்றுகொண்டிருக்கும்பொழுது, வண்டிக்குள் வெடிகுண்டு ஒன்று வீசப்பட்டது. அதன் விளைவாக, அவர் மருத்துவச் சாலையில் உயிர் துறந்தார். அவர், அவுங்சான் மந்திரி சபையில் ஒரு மந்திரியாக இருந்திருக்கிறார். அவுங்சானையும், அவர் தோழர்களையும் கொன்ற பின்னர், இவருடைய உயிருக்கு ஊறு தேட முயன்றனர். ஏற்கனவே இவர், இருமுறை கொலை முயற்சியிலிருந்துத் தப்பி இருக்கிறார்.

இன்று பர்மாவில் இராணுவச் சட்டம் அமுலில் இருக்கிறது. ஆயுத பலத்தைக் காட்டி மக்களுக்கு அச்சத்தை மூட்டி, நாட்டின் அமைதி காக்கப்பட்டு விட்டதாக, அற்ப சந்தோஷப்படும் பண்பைத்தான் பதவியிலுள்ள பலரிடத்தும் எதிர்பார்க்க முடிகிறது. அச்சமூட்டித் தோற்றுவிக்கப்படும் அமைதி, உண்மையான அமைதியாகாது. நீண்டு நிலைத்திருக்கக் கூடியதுமன்று. எந்த நிமிஷத்திலும் எதிர்ப்பு எரிமலையாகி விடும். எந்தக் குறையைக் களைய மக்கள் கொதித்தெழுகிறார்களோ, அதனை நன்கு ஆராய்ந்து கண்டறிந்து, அதனைப் போக்குவதின் மூலந்தான் அமைதியை ஏற்படுத்த முடியும். இந்த அரிச்சுவடியை மறந்து செயலாற்றுகிறார்கள் அதிகாரத்தில் அமர்ந்திருப்போர்கள் என்றும், எங்கும். போலீசும், இராணுவமும் அமைத்துத் தரும் அமைதி, அதிகாரத்திலுள்ளோருக்கு, அதுசமயம் திருப்தி அளிக்கக்கூடியதாக இருக்கலாம். ஆனால் அத்தகைய அமைதியால் மக்களின் அன்பை, ஆளுவோர் எந்நாட்டிலும் பெற்று விட்டதாக ஏடுகளில் காணோம். ஏழை, எளியவரைக் காணும் பொழுது கண்ணீர்வடிக்கும் அளவிற்கு இருதயம் இளகுவதும், துப்பாக்கியும் தடியும் துணை நிற்கும்பொழுது கண்கள் சிவப்பேறி இருதயம் இரும்பாவதும், நிலைமைக்கேற்ற நினைப்பு உண்டாவதால் விளையும் கேடுபோலும்! நிற்க,

பர்மாவின்நிலை விரைவில் சீர்பட்டுவிடும் என்று சொல்வதற்கில்லை. மக்களாட்சி எனும் நற்பயிரும், அந்த மண்ணில் விளைவது அரிது அரிது என்று தான் தீர்மானிக்கவேண்டியதாக இருக்கிறது. வெள்ளை ஏகாதிபத்திய நாடுகளின் பிடியில் சிக்கிய, கீழ்நாடுகள் அனைத்திலுமே இந்த இழிந்தநிலைதான் இருந்து வருகிறது. என்றுதான் இதற்கெல்லாம் ஒரு முடிவேற்பட்டு மக்கள் மக்களாகவாழும்நிலை பிறக்குமோ!

நமது வயிற்றைத் தாக்கும் அளவிற்கு அங்கு குழப்பம் உருப்பெற்றுள்ளது. அதாவது நமக்கு பர்மா அரிசி தற்சமயம் கிடைக்காது. குழப்பத்தின் விளைவாக அங்கு செந்நெல் தரும் வயல்கள் பாழாக்கப் படுகின்றன. வயல்கள் நிலையே இதுவானால், மற்றத் தொழில்கள் பற்றி குறிப்பிடாமலே அறிந்துகொள்ளலாம். பர்மிய குழப்பம் பர்மியரை நீங்கினோரை மட்டும் தாக்கவில்லை, பர்மியரையும் தாக்கத்தான் செய்கிறது. மக்களுக்கு வழிகாட்டும் பொறுப்பு தங்களுக்குத்தான் சொந்தமானது எனும் தவறான எண்ணம் கொண்டுள்ள தலைவர்களின், பாழான போக்கிற்கு மக்கள் கொடுக்கும் பரிசாகும் இது. மக்களின் கல்விநிலை, விஷயஞானம் உயர்ந்தாலன்றி மக்களாட்சி மலருவது முடியாத காரியம். மக்கள் அறிவு வளப்பத்திற்கேற்பத்தலைவர்களும் அமைகிறார்கள் எனும் அறிஞர்வாக்குப் பர்மாவிஷயத்தில் உண்மையாகிவிட்டது. பர்மாவின் நிலை நமக்கு நல்லதோர் படிப்பினையாக அமையட்டும்.

## வெட்கப்படவேண்டும்

2-ம் பக்கத் தொடர்ச்சி

...பது மட்டும் ஜனநாயகம் என்றும் சொல்வதற்கு இல்லையே! உலக அறிஞர் ஷா கூறினதுபோல். தலைக்குள் என்ன இருக்கிறது என்பதைக் கொண்டல்லவோ மக்களாட்சியை நிர்ணயிக்க வேண்டியதாக இருக்கிறது. இந்த முற்போக்கான கொள்கையின்படி இல்லையாயினும், சாதாரண ஜனநாயக முறைப்படி கூட இன்று இருப்பது மக்கள் ஆட்சி முறை ஆகாது.

எடுத்துக்காட்டாகச் சென்னை சட்ட சபையை எடுத்துக்கொள்வோம். இங்கு இரு சட்ட சபைகள் உண்டு. ஒன்று மேல் சபை; மற்றொன்று கீழ்சபை என்று பெயர். ஏழை எளியவர்களின் பிரதிநிதிகள் அங்கு தான் வீற்றிருக்கிறார்கள். அந்தச் சபையிலே மொத்தம் 215 அங்கத்தவர்கள் இருக்கிறார்கள். முஸ்லிம் அங்கத்தவர்களும், ஒன்றிரண்டு உதிரிகளும் நீங்கலாக, மற்றவர்கள் அனைவரும் மந்திரிசபையினரின் கட்சியைச் சேர்ந்த காங்கிரஸ் அங்கத்தவர்கள். இவர்களில் பெரும்பாலோர் சிறை சென்றவர்கள். ஒருவர் இருவர் காமராஜருக்குக் காவடி எடுத்து, அந்த நாற்காலிகளை அலங்கரித்துக் கொண்டிருப்பவர்கள்.

இந்த அங்கத்தவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதம் 150 ரூபாய் சம்பளம். சட்ட சபை கூட்டங்களுக்குச் செல்வதற்கான வழிச் செலவு, கூட்ட காலங்களில் அதற்கான படிச் செலவு இவ்வளவும் பெற்றுக் கொண்டு, தொண்டு செய்கிறார்கள் மக்களுக்கு. வாக்காளர்கள் தங்களுக்குத் துளியும் சம்பந்தமில்லாத எதை எதையோ நினைத்துக் கொண்டு, இவர்களுக்கு ஓட்டளித்திருக்கலாம். இவர்கள் செய்வதாகப் பிரசாரஞ் செய்யப்பட்ட தியாகங்களை நம்பி, தங்கள் நன்றி மறவாத் தன்மையைக்காட்டிக்கொள்ளவேண்டும். என்பதற்காக இவர்களுக்குத் தங்கள்வாக்குரிமைகளை வழங்கி இருக்கலாம். வாக்காளர்களின் இந்தச் செயல், தியாகிகள் மீது, அவர்கள் கொண்டிருந்த அமோகமான அன்பையும், பாசத்தையும், பற்றுதலையும் அல்லவா காட்டுகிறது?

தங்கள் மீது, இத்தகைய அன்பு கொண்டு நடந்துகொண்ட மக்களிடத்தில், இந்தச் சட்டசபை அங்கத்தவர்கள் எந்த வகையில் நடந்து கொள்ளவேண்டும்? வாக்களித்தவர்கள், கடுகத்தனையும் தங்களிடத்தில் அவநம்பிக்கை கொள்ளாத முறையில் அல்லவா நடந்துகொள்ள வேண்டும்? வாக்காளர்கள் குறைகளைக் களையவும், தேவைகளைப் பூர்த்தி செய்யவுமான நடவடிக்கை

களில் அல்லவா, இவர்கள் தங்கள் முழு நேரத்தையும் செலவு செய்ய வேண்டும். செய்ததுண்டா இது வரையில் இவர்கள்?

சட்ட சபை கூடுகின்ற காலத்தில் எல்லாம், சொந்த வேலையோ, பிறர் பணியோ, எதுவாக இருந்தாலும் சில நாளைக்குத் தள்ளிவைத்துவிட்டு, புதிதாகச் சட்டம் என்ன கொண்டு வரப்படுகிறது, அதன் விளைவு யாது, அதனால் தீமையா நன்மையா, பொதுமக்களுக்கு அதனால் சுக வாழ்வு அளிக்கமுடியுமா, என்பன போன்ற பல பிரச்னைகளையும் நன்கு ஆராய்ந்து அல்லவா செயலாற்ற வேண்டும்? பெரும்பாலானமக்களுக்குக் கேடுவிளைவிக்கக்கூடியதாக அச்சட்டம் இருக்குமானால், அதனை எதிர்த்துத் தோற்கடிக்கவும், முடியவில்லையானால் அதனால் விளையும் இன்னல்களைத் தனது தொகுதி வாக்காளர்களுக்கு விளக்கிக் கூறி, கேடு பயக்கும் அச்சட்டத்தைக் கொண்டுவரும் காரணகாரியத்தை எடுத்துக் காட்டி, மக்களின் அனுமதியைப் பெற்றபின்னராவது அல்லவா தீர்மானத்திற்கு வாக்களிக்க வேண்டும்? பொதுவாக மக்களைக், குறிப்பாக வாக்காளர்களை மதித்து நடக்கும் மாண்பினர்களாக இருந்தால் அல்லவா, இந்தப் பெரும் புத்தி அவர்களுக்கு இருக்கப் போகிறது?

விற்பனை வரியை உயர்த்துவதாகவோ, வேறு புதுவரி விதிப்பதாகவோ ஒரு மசோதா சட்டசபையில் கொண்டுவருவதாக வைத்துக்கொள்வோம். இந்த நிலையில் ஒரு சட்டசபை அங்கத்தினரின் கடமை என்ன? இப்புது வரியினால் பாதிக்கப்படுகிற தமது வட்டாரத்திலுள்ள மக்களைக்கலந்து ஆலோசிப்பதன்றோ முறை—ஒழுங்கு. இதுவரை எந்த சட்டசபை அங்கத்தவராவது, இவ்வாறு செய்தார் என்று உங்களில் யாராவது கேள்விப்பட்டதுண்டா? இவ்வாறு செய்ய அவர்கள் நினைத்ததுண்டு என்றாவது உறுதி கூற முடியுமா?

மக்களின் வாழ்வைப் பாதிக்கும் மசோதா, சட்டமாகிச் சட்டப்புத்தகத்தில் ஏறிவிட்ட பின்னராவது, தமது தொகுதி வாக்காளர்களைச் சந்தித்து, 'இத்திங்கள் சட்ட சபையில் ஒருசட்டம் நிறைவேறியிருக்கிறது, அதனால் உங்களுக்கு இன்னின்ன நன்மைகள் ஏற்படும், அதனால் உங்கள் எதிர்கால வாழ்வு நன்றாக இருக்கும்' என்றாவது விவரித்துக் கூறினதுண்டா? அதுவும் கிடையாதே!

இவ்வளவு சிறிய விஷயங்களையா இந்தப் பெரிய மனிதர்களிடம் எதிர்பார்ப்பது? கூடாது தான். பள்ளி செல்லும் பிள்ளை ஒருவன், பள்ளிக்குச் செல்லாமல், பள்ளி செல்ல வேண்டிய நேரத்தில் வேறு எங்காவது விளையாடிவிட்டோ, எவர் திண்ணையிலாவது உறங்கிவிட்டோ, பள்ளி சென்ற பிள்ளைகள் வீடுதிரும்பும் பொழுது, அவனும் வீடுதிரும்பி வந்தால், அவன்போக்குப் பெற்றோர்களுக்குத்தெரியாமல் இருக்கிறவரையில், அவன் தப்பித்துக் கொள்வான். அவன் விஷயம் தெரிந்த பின்னர், அவனைப் பெற்றோர்கள் என்ன சொல்வர்? 'வாடா கண்மணியே! இந்தப் பிள்ளைகள் எல்லாம் எதற்கு? ஒழுங்காககப் பள்ளிக்கூடம் போகிறார்களே! பாடங்களையும் படிக்கிறார்களே! உருப்படாதுகள்! உன் காலைக் கழுவி குடித்தால் கூட அவர்களுக்கு புத்தி வருமா!' என்று உபசரிப்பார்கள்? கையில் கிடைத்ததைக் கொண்டல்லவா சாடுவார்கள் பையனை. அத்துடன் மட்டுமா விட்டு விடுவார்கள்? 'திண்ணை தூங்கி' 'தடிராமா' 'சோத்துமாடே' என்றெல்லாமல்லவா அர்ச்சனை செய்வார்கள்?

பள்ளியில் படிக்கும் மாணவனைக் காட்டிலும் அதிகப் பொறுப்புணர்ச்சியோடு நடந்துகொள்ள வேண்டிய, பலரின் நம்பிக்கைக்குப் பாத்திரமான, மக்களின் நித்தியப்படி நடைமுறைகளை நிர்ணயிக்கும் நிலையிலுள்ள, இந்த அங்கத்தவர்கள், தங்களுக்குண்டான பணியையாவது கண்ணும் கருத்துமாகச் செய்கிறார்களா என்றால், அதுவும் கிடையாது.

ஒருவர் இருவர் நீங்கலாக மற்றக் காங்கிரஸ் அங்கத்தவர்கள் அனைவரும் சட்டசபை கூடுங்காலங் காலங்களில், கண்டிப்பாகச் சட்டசபைக்குள் சென்று விடுகிறார்கள். அங்குள்ள குறிப்புப் புத்தகத்தில், 'பிரசெண்ட்'டும் போட்டுவிடுகிறார்கள். ஆனால் சட்டசபை நடந்து கொண்டு இருக்கும்பொழுது தான், மண்டபத்திற்குள்ளே நபர்கள் இருப்பதில்லை. 'டோகர்' கொடுத்து விடுகிறார்கள். சைனாபஜார்-இல்லை—இல்லை—நேத்தாஜி பஜார், மவுண்ட் ரோட், முதலிய இடங்களிலே வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள். இன்னும் சிலர் தாம் தாம் தங்கியிருக்கும் ஓட்டல்களிலேயே, நாவுக்கு உருசியாக உண்டு, நல்ல நித்திரை மேற்கொண்டு, இரவு 'சினிமா'படம் பார்ப்பதற்குத் தங்களைத் தயார் செய்துக்கொள்கிறார்கள். வேறு சிலர், தம் குழந்தைகளுக்கு வேண்டிய விளையாட்டுச் சாமான்களையும், வீட்டுக்கு வேண்டிய சோப்பு, பவுடர், ரிப்பன் முதலியன கொள்முதல் செய்வதிலும் காலத்தைக் கழிக்கிறார்கள். வெட்கப்படக்கூடிய விஷயம்!

மாதச்சம்பளம் பெற்று வேறு அலுவல் பார்க்கும் ஒரு அதிகாரி, அவருக்கு ஒதுக்கியுள்ள அலுவல்களைக் காலத்தோடு, ஒழுங்காகச் செய்யவில்லையானால், அவர் மீது ஆதிக்கம் செலுத்தும் உரிமை பெற்றுள்ள மந்திரியார், அதிகாரியை அவர் போக்கிலேயே நடக்கவிட்டு விடுவாரா? காலாகாலத்தில் வேலை செய்யாததற்குக், காரணங்காட்ட வேண்டுமென்று கடுங்கோபம் கொள்ளமாட்டாரா? முதலில் எச்சரிக்கையும், இரண்டாவதாகச் சில நாள் வேலையிலிருந்து விலக்குதலும், முடிவில் வீட்டுக்கே அனுப்புதலுமன்றோ, ஒழுங்கு தவறின அதிகாரி மீது எடுத்துக்கொள்ளும் நடவடிக்கைகளாக அமையும்?

அலுவல் பார்க்கும் அதிகாரிக்கே அத்தகைய பொறுப்பும், கடமையைச் செய்யத்தவறுவதால் ஏற்படும் விளைவும், இவ்வளவு கெடுபிடியானதாக இருக்கிறதென்றால், மக்கள் செலுத்தும் வரிப்பணத்திலிருந்து வழிச்செலவும், படிப்பணமும், மாதச்சம்பளமும் பெறும் சட்டசபை உறுப்பினர்களுக்கு இருக்க வேண்டிய பொறுப்புணர்ச்சி மேலும் உயர்ந்ததாகவன்றோ இருத்தல்வேண்டும். தாங்கள் கைநீட்டிப் பெறும் பணம், தங்கள் இரத்தத்தை வியர்வையாக மாற்றி, பொதுமக்கள் வரியாகக் குவித்தது என்பதை இவர்கள் மறக்கலாமா?

மக்கள் அன்பை, ஆதரவைப் பெற்றுச் சட்டசபை மண்டபத்தில் வீணுக்குக் கொலுவீற்றிருக்கும் இவர்கள், அவர்கள் கொடுக்கும் வரிப்பணத்தை மனதார மாதா மாதம் வாங்கி வாணவேடிக்கைவிடும் இவர்கள், அதற்குப் பிரதிபலனாக, மக்களுக்கு நல்வாழ்வு அளிக்கவில்லையாயினும், கேடுசெய்யாமலாவது இருந்தோமா என்று, என்றாவது

இவர்கள் எண்ணிப்பார்த்திருப்பார்களா? நலமோ ஹிதமோ, தாங்கள் செய்தது எதுவாயினும், தங்களைத் தேர்ந்தெடுத்தனுப்பிய, அதுவும் தங்கள் தகுதியை சீர்தூக்கிப் பார்க்காது, அன்பின் மிகுதியால் தேர்ந்தெடுத்து அனுப்பிய வாக்காளர்களுக்கு, விளக்கிக்கூற வேண்டும், அதுவே தங்களது முதற்கடமை, தங்களுக்கு வாக்களித்தவர்களுக்குத் தாங்கள் செய்யவேண்டிய இன்றியமையாத நற்செயல் அது ஒன்று தான், என்பதுவது இந்தச்சட்டசபைப் பதுமைகள் நினைத்திருக்குமா?

'எங்கள் வாக்குகளைப் பெற்றுப் போனீரே, இதுவரை எங்களுக்காக நீர் சாதித்ததென்ன? அன்று உங்களைக் கண்டோம், குழைந்து குழைந்து பேசினீர், பின்னர் எங்களை ஏறெடுத்தும் பார்க்கவில்லையே? எங்கு சென்றீர் இவ்வளவுகாலமாய்; வீடு இருந்தது, ஏதோ கொஞ்சம் வயற்காடு இருந்தது, இந்த ஐந்து ஆண்டில் அவ்வளவையும் விற்றுக் கடனுக்குக் கொடுத்துவிட்டோம்; பொருட்களின் விலையேற்றத்தின் விளைவு இது; குடும்பத்தைக் காக்க வேறுவழி தெரியாததால் இந்த நடவடிக்கையை மேற்கொண்டோம்; விலை ஏறுவதின் விவரத்தைக் கேட்கவும், தடுக்கநடவடிக்கை எடுக்க வேண்டிக்கொள்ளவும் தங்களைத் தேடினோம், கிடைத்தீரில்லை; இன்று வந்திருக்கிறீர் எங்களை மதித்து? மனச்சாட்சியற்றவரே! மனிதத்தன்மை இல்லாதவரே! நன்றி கொன்ற நல்லவரே! போமையா போம்!" என்று நாட்டார்கள், என்றுவது ஒருநாள் கேட்டால், இந்த மந்திரிகளும் தந்திரிகளும், இவர்களைத் தாங்கி நிற்கும் இந்த வாய் திறவாப் பாவைகளும் எது பகர்வர்? வெட்கப்படத்தானே வேண்டி இருக்கும்?

"My Complaint is that they do not put enough questions to me in the Legislature and elicit information regarding various aspects of the Finance Department."

பொருளாதார இலாகாவின் விவகாரங்களை நன்கு விளங்கிக்கொள்ளும் முறையில், தேவையான அளவிற்கு என்னை, சட்டசபையில் கேள்விகள் கேட்கப்படுவதில்லை. இதுவே எனது குற்றச்சாட்டு.

சட்டசபை அங்கத்தினர்களுக்கு, இத்தகு நற்சாட்சிப் பத்திரத்தை நல்கினது யார் என்று கருதுகிறீர்கள்? காங்கிரஸ் விரோதிகளா? தியாகம் தெரியாத தப்பிலிகளா? இல்லவே இல்லை. சென்னை சர்க்காரில் பொருளாதார மந்திரியாக இருக்கிற கனம் கோபால் ரெட்டிகாரு, தம்மைத் தாங்கி நிற்கும் சகாக்களுக்குக் கொடுக்கும் 'சர்டிபிகேட்' இது.

'விஷய விளக்கத்திற்கான கேள்விகள் தேவையான அளவிற்குக் கேட்பதில்லை.' எவர்? சட்டசபை அங்கத்தவர்கள். எவர் குற்றஞ் சுமத்துவது? அதே இனத்தைச் சேர்ந்த மந்திரியார். வெட்கம் வரவில்லையே இந்த அங்கத்தவர்களுக்கு இதன் பின்னரும்.

சாதாரண விஷயமே, இந்த அங்கத்தவர்களுக்குப் புரிவதில்லை என்றால், வெகு சிக்கலான பொருளியல் இவர்களுக்கு எங்கு புரியப் போகிறது? இவர்களுக்குப் புரிவது ஒன்றே ஒன்றுதான். அதுதான் கைதூக்குவது, மாதம் முடிந்ததும் கையை நீட்டுவது. இந்த இரண்டும் தவிர வேறெதுவும் இவர்களுக்குப் புரியவும் புரியாது, செவியினில் புகவும் புகாது!

அந்த விருந்துக் கூட்டத்திலேயே, மேல்சபை அங்கத்தவரான டாக்டர் லட்சுமணசாமிமுதலியார், சென்னை சர்க்காரின் வரவு — செலவு விவாதித்தல் மேல்சபையில் நூற்றுக்கு ஐம்பது விதம் அங்கத்தவர்கள் பங்கெடுத்துக் கொண்டிருக்கும் பொழுது, கீழ் சபையில் நூற்றுக்கு இருபத்தைந்து விதம் கூட அங்கத்தவர்கள் விவாதத்தில் பங்கெடுத்துக் கொள்ளவில்லையே என்றுவையாண்டி செய்திருக்கிறார்.

கீழ்சபையில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் லீக் அங்கத்தவர்கள் முப்பத்தைந்துக்குக் குறையாதவர்களையும் நீக்கிப்பார்த்தால், மிச்சம் இருக்கும் காங்கிரஸ் அங்கத்தவர்களில், விவாதத்தில் பங்கெடுத்துக்கொண்டவர்களின் சதவிகிதம் மேலும் குறைவாகவே இருக்கும். இக்கேவல நிலைக்கு எவரை நோவது? மண்டபத்தை அலங்கரிக்கும் ஆசாமிகளும், அவர்கள் நிலையை அறிந்துகொள்ளாது, அவர்களை அங்கு அனுப்பிய வாக்காளர்களுந்தான் வெட்கப்பட வேண்டும்!

சட்ட சபையில், கூட்டம் நடத்துவதற்கான எண்ணிக்கை கூடச் சில நேரத்தில் இருப்பது கிடையாது. தலைவர் கைவலிக்க மணி அடிப்பது, சட்ட சபை நிகழ்ச்சிகளில் முக்கிய இடம் பெற்று வருகிறது. எவ்வளவு கடமை உணர்ச்சி! எவ்வளவு பொறுப்புணர்ச்சி!

அங்கத்தவர்கள் கதை இது. மந்திரிகள் கதையைச் சொல்லவே வேண்டியதில்லை. பிரதமருக்குச்சட்ட சபை என்றாலே பிடிப்பதில்லை. சென்னை சர்க்காரை நடத்திச் செல்லும் நிர்வாக விஷயங்களிலே, அவர் தமது முழுக்கவனத்தையும் செலவுசெய்து வருவதால், அவர் சட்ட சபை மண்டபத்தை ஏறெடுத்தும் பார்ப்பது கிடையாது. சட்ட சபையிலே எழும் கேள்விகளுக்கு ஏற்கெனவே பிரதமர் சார்பாகக் கனம்சுப்பராயன்பதிலளித்து வந்தார். அவர் செய்த தியாகத்தில் எங்கோ கொஞ்சம் மூளியாகிவிடவே, அவரைப் பதவியிலிருந்து தள்ளிவிட்டார்கள். இப்போது அவர் ஆற்றிவந்த திருப்பணியைக் கனம் கோபால் ரெட்டிகாரு செய்து வருகிறார்.

இத்திங்கள் 11ந் தேதி சட்ட சபை கூடிற்று. வழக்கமாகக் கேட்கப்படுகின்ற 20 கேள்விகளுக்குப் பதில் 7 கேள்விகள் தான் கேட்கப் பட்டதாம். காரணம் என்ன தெரியுமா?

(12-ம் பக்கம் பார்க்க)

## கலை மாநாடு

மேற்படி மாநாடு அக்டோபர்த் திங்களில் திருச்சியில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. மாநாட்டுக்குத் தோழர் நாரணதுரைக்கண்ணன் அவர்கள் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். மற்ற விபரங்கள்பின்னால் அறிவிக்கப்படும் என்று தோழர் எஸ். வி. லிங்கம் அவர்கள் தெரிவிக்கிறார்.

Edited Printed & Puplished by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press, 95, Tirukkachinambi Street. Kancheepuram.